உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

| | | |
|---|---|---|
| தொகுதி—௪௰.] | சித்திரபானு-ஹூ மார்கழிமீ | [பகுதி—௨. |
| **Vol. 40.** | **December-1942. January-1943** | **No. 2.** |

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| இசைக்கிரமம்:— | ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தரவர்கள் | ௩௩—௪௬ |
| அருளிச்செயற் பாட அமைதி:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வித்வான் மு. இராகவையங்காரவர்கள் | ௪௭—௫௬ |
| கம்பராமாயண சாரம்:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | ௫௭—௬௪ |
| திருமுருகாற்றுப்படை முன்னுரை:— | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். S. வையாபுரிப் பிள்ளையவர்கள் B.A., B.L. | IX—XVI |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1943.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... | 1 | 8 | 0 |
| 3. | *யாப்பணியிலக்கணங்கள் ... ... ... | | | |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் ... ... | 4 | 0 | 0 |
| 7. | *தோத்திரத்திரட்டு ... ... ... | | | |
| 8. | *தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம். | 6 | 0 | 0 |
| | *ஷை இரண்டாம்பாகம் ... ... ... | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 9. | *அபிதானசிந்தாமணி ... ... ... | | | |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ... ... | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 14. | *தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ... | | | |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன ... | 0 | 1 | 0 |

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—சம.] சித்திரபானு-ஹூ மார்கழிமீ [பகுதி—உ.

Vol. 40. December-1942 January-1943 No. 2.

## இசைக்கிரமம்

சுவாமி விபுலாநந்தர்

(39-ஆம் தொகுதியின் ருஉக-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பண்டையோர்கண்ட இருபத்திரண்டு சுருதிகளுக்கும் அமைந்த நரம்புநீளங்கள் அசைவெண்விகிதங்கள் என்னுமிவற்றைக் கணித்தறியும் முறையினை ஆராய்ந்து காணப்புகுவாம்.

நரம்புக்கருவிகளிலே விசித்துக்கட்டடப்பட்ட நரம்பானது இயக்கமுறும்பொழுது ஒரு பிழம்பாக இயங்குதலோடு பின்னமாகவும் இயங்குமெனப் பூதநூலோர் முடிவுசெய்துள்ளார்.

தம்புரு (தம்பூரா) என்னும் வாத்தியத்திலே கட்டடப்பட்ட நான்கு நரம்புகளுள் ஒன்று ஒருபிழம்பாக இயங்கும்போது மந்தர ஷட்ஜம் (மெலிவு இளி) என்னும் சுவரத்தைத் தருகின்றது. இந்நரம்புதானே செம்பாலாக இயங்கி மத்திய ஷட்ஜம் (சமன் இளி) என்னும் சுவரத்தையும், வாரமாக இயங்கித் தார ஷட்ஜம் (வலிவு இளி) என்னும் சுவரத்தையும் தரும். ஒருபிழம்பினை இருசமகூறு செய்துபெற்ற ஒருகூறு செம்பால் எனப்படும்; நான்கு சமகூறு செய்துபெற்ற ஒருகூறு வாரம் எனப்படும். அங்ஙனமாதலிற்

செம்பாலின் செம்பால் வாரம் என்பது தெளிவாகின்றது. எட்டுச் சமகூறுசெய்துபெற்ற ஒருகூறு வாரச்செம்பால் எனவும், பதினாறு சமகூறுசெய்துபெற்ற ஒருகூறு வாரவாரம் எனவும் வழங்குதற் குரிய. மூன்று சமகூறுசெய்துபெற்ற ஒருகூற்றினை முப்பால் என வும், ஐந்து சமகூறுசெய்துபெற்ற ஒருகூற்றினை ஐம்பால் எனவும், ஏழுசமகூறுசெய்துபெற்ற ஒருகூற்றினை ஏழுபாலெனவும் வழங்கு வாம். முப்பாற் செம்பால், முப்பால் வாரம், ஐம்பாற் செம்பால், ஐம்பால் வாரம் என்பன முறையே ஆறிலொன்று, பன்னிரண்டி லொன்று, பத்திலொன்று, இருபதிலொன்றினைக்குறித்து நிற்பன வென்பது வெளிப்படை.

மந்தரஷட்ஜநரம்பு முப்பாலாக இயங்குமிடத்து மத்தியபஞ்ச மம் (சமன்துத்தம்) பிறக்கும். மத்தியபஞ்சமநரம்பின் இரட்டிநீள முள்ள நரம்பிலே மந்தரபஞ்சமந்தோன்றுமாதலின் மந்தரஷட்ஜ நரம்பின் முப்பாலில் இருபாலிலே மந்தரபஞ்சமந்தோற்றுமென்பது தெளிவாகின்றது.

மந்தரஷட்ஜநரம்பு ஐம்பாலாக இயங்கும்போது தாரஸ்தாயி யில் (வலிவுத்தானத்தில்) அமைந்த அந்தரகாந்தாரம் தோற்றும். ஐம்பாலில் இருபாலிலே மத்தியஸ்தாயி (சமன்தானத்து) அந்தர காந்தாரமும், ஐம்பாலில் நாற்பாலிலே மந்தரஸ்தாயி (மெலிவுத் தானத்து) அந்தரகாந்தாரமும் தோற்றுவ.

மந்தரஷட்ஜநரம்பு ஆறிலொருகூறாக, அஃதாவது முப்பாற் செம்பாலாக இயங்கும்போது தாரஸ்தாயி (வலிவுத்தானத்துப்) பஞ்சமம் தோன்றும். எழுபாலாக இயங்கும்பொழுதுதோன்றும் சுவரம் பண்டையோர்கண்ட இருபத்திரண்டுசுருதியில் அடங் காது. அவ்வாறே பதினொன்றின்பால் பதின்மூன்றின்பால் பதி னான்கின்பால் என்னும் இவையும் அடங்கா. எட்டின்பாலாகிய வாரச் செம்பால் அதிதார ஷட்ஜத்தைத் தரும். ஒன்பதின்பால் அதிதார

(சதுசுருதி) ரிஷபத்தைத் தரும். அதிதாரம் இரட்டித்த நரம்புநீளம் தாரசுவரத்தையும், அஃது இரட்டித்த நரம்புநீளம் மத்தியசுவரத்தையும், அஃது இரட்டித்த நரம்புநீளம் மந்தரசுவரத்தையும் தருவவாதலின், மந்தரசதுசுருதிரிஷபத்தின் நரம்புநீளம் ஒன்பதில் எட்டு ஆகும். பத்தின்பால் அதிதாரஸ்தாயியிலமைந்த அந்தரகாந்தாரத்தைத் தரும். பன்னிரண்டின்பால் அதிதாரஸ்தாயி பஞ்சமத்தைத் தரும். பதினைந்தின்பால் அதிதாரஸ்தாயீக் காகலிநிஷாதத்தைத் தரும். பதினாறின்பால் அதியதிதார ஷட்ஜத்தைத் தரும். இதற்கப்பால் தோன்றுவன செவிவாயிலாக ஓர்ந்துணரற்பாலவல்லவாதலின் ஆராய்ச்சியுட்படா. நாம் மேலே கண்ட முடிபுகளை அட்டவணைப்படுத்துவாம்.

## நரம்புநீள விகிதங்கள்

| ஸ்தாயி \ சுவரம் | ஷட்ஜம் | சதுசுருதி ரிஷபம் | அந்தர காந்தாரம் | பஞ்சமம் | காகலி நிஷாதம் |
|---|---|---|---|---|---|
| மந்தரம் ... | 1 | $\frac{8}{9}$ | $\frac{4}{5}$ | $\frac{2}{3}$ | $\frac{8}{15}$ |
| மத்தியம் ... | $\frac{1}{2}$ | $\frac{4}{9}$ | $\frac{2}{5}$ | $\frac{1}{3}$ | $\frac{4}{15}$ |
| தாரம் ... | $\frac{1}{4}$ | $\frac{2}{9}$ | $\frac{1}{5}$ | $\frac{1}{6}$ | $\frac{2}{15}$ |
| அதிதாரம் ... | $\frac{1}{8}$ | $\frac{1}{9}$ | $\frac{1}{10}$ | $\frac{1}{12}$ | $\frac{1}{15}$ |
| அதியதிதாரம் | $\frac{1}{16}$ | | | | |

மேலே கணித்துக்கண்ட சுவரங்களும், பண்டையோர் கண்டவற்றுள் அடங்காவென யாம் ஒதுக்கியனவும் ஆகிய அனைத்தும் ஒருபிழம்பாக இயங்கும் நரம்பு பின்னமாகவும் இயங்குதலினாலே பெறப்படுவ. இவற்றுள் ஷட்ஜசுவரங்கள் ஐந்தும் ஒருங்கிசைத்து ஷட்ஜசுவரமாகச் செவிக்குப் புலப்படுவ. அவற்றுக்

கடுத்தபடியாகப் பஞ்சமம் நான்கும் ஒருங்கிசைத்துப் பஞ்சமமாகச் செவிக்குப் புலப்படுவ. ஆகையினாலே ஷட்ஜத்தினின்று பஞ்சமம் தோற்றுமென இசையாராய்ச்சிசெய்த எல்லாத்தேசத்தினரும் கைக்கொண்டனர். பஞ்சமத்தின் பஞ்சமமாக அமைந்தது சது சுருதிரிஷபம் (விளரிநரம்பு); அங்ஙனமாயினும் ஒருபிழம்பாகவும் பின்னமாகவும் இயங்கும் நரம்பிலே பஞ்சமத்திற்கு அடுத்தபடியாக அந்தரகாந்தாரம் (தாரநரம்பு) செவிக்குப்புலப்படும்; அதன்மேல் காகலிநிஷாதமும் (உழைநரம்பும்) சதுசுருதி ரிஷபமும் புலப்படுவ. இருபத்திரண்டுசுருதியுள் அடங்காவென ஒதுக்கியனவும் இசையுட் கலந்துநிற்பவாதலின், நரம்பினியக்கத்தினால் ஏற்படும் சுவரம் கலப்புச்சுவரமாம் என்பது தெளிவாகின்றது.

நரம்பினியக்கத்தினாலே சூழவிருக்கும் பவனத்திலெழுகின்ற சிற்றலைகள் செவியினைச்சென்று சேர்தலினாலே இசைச்சுவரங்கள் செவியிந்திரியத்திற்குப் புலப்படுகின்றன. நரம்பின் நீளங்குறுகச் சிற்றலைகளின் தொகை பெருகும். முழுநரம்பினியக்கத்தினாலே ஒரு செக்கண்டு என்னும் காலவெல்லையிலே 256 சிற்றசைவுகள் தோற்றுமிடத்து அதே காலவெல்லையிலே செம்பாலினியக்கத்தினாலே 256 இன் இரட்டியாகிய 512 சிற்றசைவுகளும் வாரத்தின் இயக்கத்தினாலே 256 இன் நான்மடியாகிய 1024 சிற்றசைவுகளும் தோற்றுவன. முழுநரம்பு இரட்டிக்குமிடத்து அசைவுத்தொகை செம்பாலாகுமாதலின் 128 சிற்றசைவுகள் தோற்றுவன. மத்திய ஷட்ஜத்தின் அசைவெண் 256 ஆயின், தாரஷட்ஜம் 512, அதி தாரஷட்ஜம் 1024, மந்தரஷட்ஜம் 128 என அசைவெண் பெறுவ. மந்தரஷட்ஜத்தின் அசைவெண்விகிதம் 1 என நின்றால் மத்திய ஷட்ஜம் 2, தாரஷட்ஜம் 4, அதிதாரஷட்ஜம் 8 என அசைவெண் விகிதங்கள் அமைவன. நரம்புநீளவிகிதத்தின் தலைகீழெண் அசை வெண்விகிதமாம் என்னும் விதி மேற்கண்ட முடிபுகளால் அமை

கின்றது. மேலே நாம் கணித்தறிந்த நரம்புரீளவிகிதங்களுக்கு இயைந்த அசைவெண்விகிதங்களை அட்டவணைப்படுத்துவாம்.

## அசைவெண்விகிதங்கள்

| ஸ்தாயீ \ சுவரம் | ஷட்ஜம் | சதுசுருதி ரிஷபம் | அந்தர காந்தாரம் | பஞ்சமம் | காகலி நிஷாதம் |
|---|---|---|---|---|---|
| மந்தரம் ... | 1 | $\frac{9}{8}=1\frac{1}{8}$ | $\frac{5}{4}=1\frac{1}{4}$ | $\frac{3}{2}=1\frac{1}{2}$ | $\frac{15}{8}=1\frac{7}{8}$ |
| மத்தியம் ... | 2 | $\frac{9}{4}=2\frac{1}{4}$ | $\frac{5}{2}=2\frac{1}{2}$ | 3 | $\frac{15}{4}=3\frac{3}{4}$ |
| தாரம் ..., | 4 | $\frac{9}{2}=4\frac{1}{2}$ | 5 | 6 | $\frac{15}{2}=7\frac{1}{2}$ |
| அதிதாரம் ... | 8 | 9 | 10 | 12 | 15 |
| அதியதிதாரம் | 16 | | | | |

யாம் கொள்ளாதொதுக்கிய எழுபால், பதினென்றின்பால், பதின்மூன்றின்பால், பதினன்கின்பால் என்பவும், பதினறின்மேல் இருபதுவரையும் அமைந்த பதினேழின்பால், பதினெட்டின்பால், பத்தொன்பதின்பால், இருபதின்பால் என்பவும் எவ்வெவ்விடத்து அமைந்துநிற்பனவென்பதை மேற்றந்த அட்டவணையினுதவியினல் அறிதல்கூடும். 18 அதியதிதாரசதுசுருதிரிஷபமாகும், 20 அதியதிதார அந்தரகாந்தாரமாகும். 17 அதியதிதாரஷட்ஜத்திற்கும் அதியதிதாரசதுசுருதிரிஷபத்திற்குமிடையில் நிற்கும், மந்தரஸ்தாயீயில் இது $\frac{17}{16}$ என்னும் அசைவெண்விகிதம் பெறும். 19 அதியதிதாரசதுசுருதிரிஷபத்திற்கும் அதியதிதார அந்தரகாந்தாரத்திற்கும் இடையில் நிற்கும், மந்தரஸ்தாயீயில் இது $\frac{19}{16}$ என்னும் அசைவெண்விகிதம் பெறும். 13 அதிதாரபஞ்சமத்திற்கும் அதிதாரகாகலிநிஷாதத்திற்குமிடையில் நிற்கும், மந்தரஸ்தாயீயில்

இது $\frac{13}{8}$ என்னும் அசைவெண்விகிதம் பெறும். 11 அதிதார அந்தரகாந்தாரத்திற்கும் அதிதாரபஞ்சமத்திற்கும் இடையில் நிற்கும், மந்தரஸ்தாயீயில் இது $\frac{11}{8}$ என்னும் அசைவெண்விகிதம் பெறும். 14 உம் 7 உம் முறையே அதிதாரஸ்தாயீயிலும் தாரஸ்தாயீயிலும் பஞ்சமத்திற்கும் காகலிநிஷாதத்திற்கும் இடையே நிற்பன, மந்தரஸ்தாயீயில் இவை $\frac{7}{4}$ என்னும் அசைவெண்விகிதம் பெறுவ. மந்தர ஸ்தாயீயில் புதுவதாகத்தோன்றிய சுவரங்களின் அசைவெண்விகிதங்களை முன்னின்றவற்ருேடுசேர்த்து ஒரு தொடராகவைக்குமிடத்து 1, $\frac{17}{16}=1\frac{1}{16}$, $\frac{9}{8}=1\frac{1}{8}$, $\frac{19}{16}=1\frac{3}{16}$, $\frac{5}{4}=1\frac{1}{4}$, $\frac{11}{8}=1\frac{3}{8}$, $\frac{3}{2}=1\frac{1}{2}$, $\frac{13}{8}=1\frac{5}{8}$, $\frac{7}{4}=1\frac{3}{4}$, $\frac{15}{8}=1\frac{7}{8}$ என்னும் எண்கள் பெறப்படுகின்றன. இவையனைத்தும் 1 இல் மிக்கும் 2 இல் குறைந்தும் நிற்கக் காண்கின்ருேம். மந்தரஷட்ஜத்தின் அசைவெண் 128 எனக் கொண்டு மேல்நின்ற மந்தரஸ்தாயீச்சுவரங்களின் அசைவெண்களைக் கணிக்குமிடத்து, 128, 136, 144, 152, 160, 176, 192, 208, 224, 240 என்னும் அசைவெண்கள் பெறப்படுகின்றன. இவையனைத்தும் மத்தியஷட்ஜத்தின் அசைவெண்ணுகிய 256 இற் குறைந்தும் மந்தரஷட்ஜத்தின் அசைவெண்ணுகிய 128 இன் மிக்கும் நின்றன. மந்தரஸ்தாயீ அசைவெண்விகிதங்களனைத்தும் 1 இற்கும் 2 இற்கும் இடைநின்றன. மேலே தந்தவற்றை இரட்டித்துப்பெற்ற அசைவெண்களாகிய 256, 272, 288, 304, 320, 352, 384, 416, 448, 480 என்பன மத்தியஸ்தாயீயில் மேற்கண்ட சுவரங்கள்பெறும் அசைவெண்களாம். இவை மத்தியஷட்ஜத்தின் அசைவெண்ணுகிய 256 இன் மிக்கும் அதன் இரட்டியாய்த் தாரஷட்ஜத்தின் அசைவெண்ணுகிய 512 இற் குறைந்தும் நின்றன. மத்தியஷட்ஜ அசைவெண்விகிதத்தை 1 எனக்கொண்டால் தாரஷட்ஜ அசைவெண்விகிதம் 2 ஆகும். மேற்காட்டிய சுவரங்களின் அசைவெண்விகிதங்களனைத்தும் 1 இற்கும் 2 இற்கும் இடைநிற்பன. எந்த ஸ்தாயீயிலும் ஆதாரஷட்ஜத்தின் அசைவெண்விகிதத்

தினை 1 எனக்கொள்ளுமிடத்து அந்த ஸ்தாயீயின் சுவரங்களனைத் திற்கும் அமைந்த அசைவெண் விகிதங்களனைத்தும் 1 இன் மிக்கும் 2 இற் குறைந்தும் நிற்பன. ஒரு ஸ்தாயீயிலமைந்த சுருதிகள் 22 என்பது வடமொழி தென்மொழி இசைநூல்களிற் கண்ட முடிபு. கணிதமுறையாக யாம் செய்த ஆராய்ச்சியினுலும் அம்முடிபே பெறப்பட்டது. அரைச்சுருதிகள் 42 என ஆராய்ச்சியாற் பெறப் படுகின்றது. இவற்றின் அசைவெண்விகிதங்களை உரியவிடத்திற் றருவாம். மேல்நாட்டு இசைமரபைத்தழுவிச் சுருதி 24, அரைச் சுருதி 48, காற்சுருதி 96 எனக்கொண்டாரும் பிறவாறுகொண்டா ரும் உளர். யாவர் எவ்வாறுகொள்ளினும் ஒரு ஸ்தாயீயில் (தானத் தில்) உள்ள எல்லாச் சுருதிகளின் அசைவெண்விகிதங்களும் 1 இன் மிக்கும் 2 இற் குறைந்தும் நிற்பன வென்பது அனைவர்க்கும் ஒப்ப முடிந்த முடிபு ஆகும்.

1, 2 என்னும் எண்களின் இடைவெளியினை நுணித்துநோக்கு தற்குச் சாதாரணஎண் கணிதமுறைகள் வாய்ப்புடையனவல்ல வாதலின் லகுவெண் கணிதமுறையினைக் கைக்கொள்வது இன்றி யமையாததாகின்றது. 'செந்தமிழ்' 38-ஆந்தொகுதி 11-ஆம்பகுதி யில் (விஷு வருஷ புரட்டாசிமீ வெளியீட்டில்) 'எண்ணலளவை' என்னும் தலைப்பெயர்க்கீழ் (Logarithm என்னும்) லகுவெண்ணைக் குறித்துப் பொதுவகையாகக்கூறினும். எண்கணிதப்பெருக்கல், பிரித்தல் இலகுவெண்கணிதத்தில் முறையே கூட்டல் கழித்தல் ஆகுமெனக் காட்டினும். மேலே மந்தரஸ்தாயீயில்நின்ற 1, $\frac{9}{8}$, $\frac{5}{4}$, $\frac{3}{2}$, $\frac{15}{8}$ என்னும் ஐந்து அசைவெண் விகிதங்களுக்கும் அமைந்த லகுவெண் களைக் காண்பாம். 1 இன் லகுவெண் வெற்றிலக்கம் 0, லகு 9= ·9542, லகு 8=·9030, ஆதலினுலே லகு $\frac{9}{8}$=·9542—·9030= ·0512. லகு 5=·6990, லகு 4=·6020, ஆதலினுலே லகு $\frac{5}{4}$=·0970 லகு 3=·4771, லகு 2=·3010, ஆதலினுலே லகு $\frac{3}{2}$=·1761. லகு 15 = 1·1761, லகு 8 = ·9030, ஆதலினுலே லகு $\frac{15}{8}$ = ·2731.

மேலே யாம் எடுத்தாண்ட லகுவெண் மதிப்புக்களெல்லாம் குறித்த 'எண்ணலளவை' என்னும் பொருளுரையினின்று எடுக்கப்பட்டன. பிறவற்றைப்போலவே லகு 1 நான்கிலக்கம் பெற்றுநிற்குமாறு அதன் மதிப்பை 0000 என நான்கு வெற்றிலக்கங்களாற்குறித்து மேற்கண்ட முடிபுகளை அட்டவணைப்படுத்துவாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அசைவெண்விகிதம் | 1 | $\frac{9}{8}$ | $\frac{5}{4}$ | $\frac{3}{2}$ | $\frac{15}{8}$ | 2 |
| இலகுவெண் | ·0000 | ·0512 | ·0970 | ·1761 | ·2731 | ·3010 |

எல்லாச்சுருதிகளின் இலகுவெண்களும் வெற்றிலக்கத்திற்கும் ·3010-க்கும் இடைநிற்பன.

மேனாட்டார் பன்னிரண்டு சுவரஸ்தானங்களையும் ஒத்தநீர்மையவாக்கி ஒரு ஸ்தானக்கு 100 சென்ற் (Cent) ஆக ஒரு ஸ்தாயியில் 1200 சென்ற் கொண்டார்கள். ஈழநாட்டினர் ஒருரூபாவில் 100 சதமென நாணயமாற்றுமுறைகொள்வார். ஒரு சுவரஸ்தானம் ஒருரூபாவெனவைப்பின் சென்ற் சதமாகும். ஆதலினாலே சென்ற் என்பதைச் சதமென வழங்குவாம். மேனாட் டிசைச்சதக்கணக்கு லகுவெண் நிலைக்களமாகப்பிறந்தது. லகு 2 ஆகிய ·3010 இனை 1200 சதமாக்குதற்கு அதனை 3986 இனாற் பெருக்கவேண்டும்.

·3010× 6= 1·8060
·3010× 10= 3·010
·3010× 100= 30·10
·3010×1000=301·0

......................1·8060
·3010× 80= 24·080
·3010× 900=270·90
·3010×3000=903·0

1199·7860

தசமப்புள்ளியையடுத்துவரும் இலக்கம் 5 அல்லது 5 இன் மேற்பட்டுநிற்பின் ஒன்றன் தானத்திலக்கத்திற்கு 1 கூட்டிப் புள்ளியையடுத்துவரும் எல்லா இலக்கங்களையும் நீக்கிவிடலாம். அவ்வாறு செய்யக்கிடைப்பது 1200 சதம்.

இவ்வாறே பிறஅசைவெண்விகிதங்களது சதவிலக்கங்(சேன்ற்)களையும் கணித்து அட்டவணைப்படுத்துமிடத்து அவை,

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அசைவெண்விகிதம் | 1 | $\frac{9}{8}$ | $\frac{5}{4}$ | $\frac{3}{2}$ | $\frac{15}{8}$ | 2 |
| சதவிலக்கம் | 0000 | 204 | 386 | 702 | 1088 | 1200 |

என நிற்பன. கணிதமுறையினுற் பெறப்படுவதும், மேனுட்டார் பெரிதும் வழங்குவதுமாகிய சதவிலக்க (சேன்ற்) முறையினைத் தென்னுட்டிசைவாணரும் எளிதின் உணர்ந்து வழங்குதல்கருதி ஒரு கருவிச்சூத்திரம் அமைத்துத்தருவாம்.

சதவிலக்கச்சூத்திரம்

ஓஓஓஓ ஒன்றின்பாலே
கோனோர்நாதம் கூறுமிரண்டே
வானோர்வையம் மன்னும் மூன்றே
போதோநீதா புல்லும் நான்கே
பூவேயென்றுள் பொற்புடையைந்தே
நாளோரந்தி நல்கியதாறே
மையூடிப்பி வரினஃதேழே
ஓரோருழி யொன்றியதெட்டே
கீழோர்மேலில் கேளொன்பதுவே
ஊடேவைம்மின் ஒப்புறுபத்தே
நல்குமத்தீ நவில்பன்னொன்றே
யாரோநின்றீர் கூர்பனிரண்டே
கோண்டீர்மீளீர் பன்மூன்றுகும்
பைங்கூழுண்டீர் பத்தொடுநாலே
வேறேகூறீர் சேர்பதினைந்தே
கோடோடேகீர் கொள்பதினுறே
உள்ளோவைத்தீர் ஓர்பதினேழே
நீரோமோதும் மூவாறுகும்
எல்லைபோடும் சொல்பத்தொன்பான்
கூடேகட்டும் நாலைந்தென்ப

ஒன்றுமுதல் இருபதுவரையுமுள்ள எண்களின் லகுவெண்களைத் தனித்தனி 3986 இனுற் பெருக்கிப்பெற்ற பேருகிய சதவிலக்கங்கள் மேலேதந்த கருவிச்சூத்திரத்திற் காணப்படுவன.

தமிழிலே சோதிடநூல் வகுத்துரைத்த அறிஞர் கைக்கொண்ட மரபினைப் பின்பற்றி எண்கள் 'வாக்கியங்'களில்வைத்துக் கூறப்பட்டன. வாக்கியங்களை எண்ணுக்குமிடத்துத் தனிமெய்கள் மதிப்புப்பெறு. உயிர்கள் தனித்தும் மெய்யொடு மருவியும்நின்று மதிப்புப்பெறுமிடத்து ஒகர ஓகாரங்கள் வெற்றிலக்கம் (0) ஆக மதிக்கப்படுவ. அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ என்னும் ஒன்பதும் முறையே 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்னும் மதிப்பினைப்பெறுவ. வாக்கியங்களில் ஒன்றின்தானம் பத்தின்தானம் நூற்றின்தானம் ஆயிரத்தின்தானம் என எண்கள் நிற்பனவாதலின் அவைதம்மை எதிர்நிரலாக எழுதி ஆயிரத்தின்தானம் நூற்றின்தானம் பத்தின்தானம் ஒன்றின்தானமென நின்ற எண்மானமுறையில் வைக்கவேண்டும். இளமையிற்கற்ற சூடாமணியுள்ளமுடையான் நினைவினைக்கொண்டு மேற்போந்தவற்றை எழுதினும். சோதிடநூன்மரபு வேருயிருப்பினும் மேலேகாட்டிய முறையினையே இவ்வாராய்ச்சிக்குரியதென அறிஞர் ஏற்றுக்கொள்வாராக. இம்முறையினின்று சூத்திரத்துட்பொருளை அட்டவணைப்படுத்தி நிறுவுவாம். சூத்திரம் நினைவில் நிற்குமெனில் அட்டவணையினை நோக்காமலே சுருதிகளுக்கியைந்த சதவிலக்கங்களை எளிதிற் பெற்றுக்கொள்ளலாம்.

| எண் | வாக்கியம் | சதவிலக்கம் |
|---|---|---|
| 1 | ஒஒஒஒ | 0000 |
| 2 | கோனோர்நாதம் | 1200 |
| 3 | வானோர்வையம் | 1902 |
| 4 | போதோநீதா | 2400 |
| 5 | பூவேயென்றுள் | 2786 |

| | | |
|---|---|---|
| 6 | நாளோரந்தி | 3102 |
| 7 | மையூடிப்பி | 3369 |
| 8 | ஓரோரூழி | 3600 |
| 9 | கிழோர்மேலில் | 3804 |
| 10 | ஊடேவைம்மின் | 3986 |
| 11 | நல்குமத்தீ | 4151 |
| 12 | யாரோநின்றீர் | 4302 |
| 13 | கொண்டீர்மீளீர் | 4440 |
| 14 | பைங்கூழுண்டீர் | 4569 |
| 15 | வேறேகூறீர் | 4688 |
| 16 | கோடோடேகீர் | 4800 |
| 17 | உள்ளோவைத்தீர் | 4905 |
| 18 | நீரோமோதும் | 5004 |
| 19 | எல்லைபோடும் | 5097 |
| 20 | கூடேகட்டும் | 5186 |

சதவிலக்கங்கள் லகுவெண் நிலைக்களமாகப் பிறந்தனவாத லின் அவற்றைப்போலவே சாதாரண எண்களின் பெருக்கல் பிரித்தல் சதவிலக்கங்களில் முறையே கூட்டல் கழித்தலாகும். உதாரணமாக 6 இன் சதவிலக்கம் 3 இன் சதவிலக்கத்தையும் 2 இன் சதவிலக்கத்தையும் கூட்டிப் பெறப்படுவது. 14 இன் சதவிலக்கம் 7 இன் சதவிலக்கத்தையும் 2 இன் சதவிலக்கத்தையும் கூட்டிப் பெறப்படுவது. இங்குத்தரப்படாத 21 இன் சதவிலக்கம் 7 இன் சதவிலக்கத்தையும் 3 இன் சதவிலக்கத்தையும் கூட்டிப்பெறப்படுவது. $\frac{4}{3}$ இன் சதவிலக்கம் 4 இன் சதவிலக்கத்திலிருந்து 3 இன் சதவிலக்கத்தைக் கழித்துப்பெறப்படுவது. 25 இன் சதவிலக்கம் 5 இன்

சதவிலக்கத்தை இருபடிவைத்துக் கூட்டிப்பெறப்படுவது. பிறவு மிவ்வாறே. பின்வருஞ் செய்கைமுறைகள் இதனைத் தெளிவு படுத்துவன.

$\frac{21}{20} = \frac{7 \times 3}{20}$ ஆதலின் $\frac{21}{20}$ இன் சதவிலக்கம் 3369 + 1902—5186 = 85 சதம் ஆகும்

$\frac{25}{24} = \frac{5 \times 5}{6 \times 4}$ ஆதலின் $\frac{25}{24}$ இன் சதவிலக்கம் 5572—5502 = 70 சதம் ஆகும்

இதனை மற்றொருவகையாகவும் நோக்கலாம்

$\frac{25}{24} = \frac{5}{4} \div \frac{6}{5}$. $\frac{5}{4}$ அந்தரகாந்தாரத்தின் அசைவெண்விகிதம். இதன் மதிப்பு 2786—2400=386 சதம்

$\frac{6}{5}$ சாதாரணகாந்தாரத்தின் அசைவெண்விகிதமாகும். இதன் மதிப்பு 3102—2786=316 சதம். இவற்றின் இடைவிகிதம் 386—316=70 சதம்.

$\frac{27}{25} = \frac{9}{5} \div \frac{5}{3}$. $\frac{9}{5}$ கைசிகிநிஷாதத்தின் அசைவெண்விகிதம். இதன் மதிப்பு 'கீழோர்மேலில்' என்னும் வாக்கியத்திலிருந்து 'பூவேயென்றாள்' என்னும் வாக்கியத்தைக்கழித்துப் பெறப்படுவது 3804 — 2786 = 1018 சதம்.

$\frac{5}{3}$ சதுசுருதிதைவதத்தின் அசைவெண்விகிதம். இதன் மதிப்பு 'பூவேயென்றாள்' என்னும் வாக்கியத்தி லிருந்து 'வானோர்வையம்' என்னும் வாக்கியத்தைக் கழித்துப்பெறப்படுவது 2786 — 1902 = 884 சதம். இவற்றின் இடைவிகிதம் 1018—884 = 134 சதம்.

$\frac{27}{16} = \frac{9}{8} \times \frac{3}{2}$ ஆதலின் $\frac{27}{16}$ இன் சதவிலக்கம் $\frac{9}{8}$ இன் சதவிலக்கத்தை யும் $\frac{3}{2}$ இன் சதவிலக்கத்தையும் கூட்டிப்பெறப்படுவது.

$\frac{9}{8}$ சதுசுருதிரிஷபத்தின் அசைவெண்விகிதம். இது 'ஓரோரூழி' குறைந்த 'கீழோர்மேலில்' ஆகுமாதலின்

இதன் மதிப்பு 204 சதம். $\frac{3}{2}$ பஞ்சமசுவரத்தின் அசைவெண்விகிதம்; இதன் மதிப்புக் 'கோனோர் நாதம்' குறைந்த 'வானோர்வையம்' 702 சதம். ஆதலின் $\frac{27}{16}$ இன் மதிப்பு 702+204 = 906 சதம்.

$\frac{27}{16}$, $\frac{27}{25}$, $\frac{25}{24}$, $\frac{21}{20}$ என்னும் விகிதவெண்கள் முறையே 27: 16, 27: 25, 25: 24, 21: 20 என்னும் உருவமாகவும் எழுதப்படுவ.

இனி இருபத்திரண்டு சுருதிகளின் சதமதிப்புகளைக் காணப் புகுவாம். கணிதநூல் கருவியாக யாம் ஆராய்ந்துகண்ட இருபத்திரண்டு சுருதிகளின் அசைவெண்விகிதங்கள் பண்டைத்தமிழிசையாசிரியர் வகுத்தோதிய பாலைத்திரிபுகளுக்கும் வடமொழிப் பரதம்வகுத்த கிராமமூர்ச்சனைகளுக்கும் ஏற்புடையன. சாரங்கதேவருரைத்த சங்கீதரத்நாகர நூன்முடிபுகளுக்கும் பொருந்துவன. அகோபலபண்டிதரும் வேங்கடமகியும் கொண்ட சுருதிகள் பிறிதொரு மாபினைத் தழுவியன. அவைதம்மைத் தனியாக மற்றொருதருணத்தில் ஆராய்வாம்.

சுருதிகளைப் பிறப்பிக்கும் முறையினைச் 'சுருதிவீணை'யென்னும் சிறுநூலிலே சுருக்கமாகக் காட்டினும். யாம் எழுதிவரும் 'யாழ்நூலி'லே பெருக ஆராய்ந்திருக்கின்றாம். 'செந்தமிழ்' அன்பர்கள்பொருட்டும், இம்முடிபுகள் இயற்றமிழ்வல்லாரிடையிலும் பரவவேண்டுமென்னும் பெருவிருப்பினுலும் அடுத்துவரும் 'செந்தமிழ்ப்பகுதியொன்றிலே இப்பொருளினைச் சுருக்கிவிளக்க எண்ணியிருக்கின்றாம்.

இருபத்திரண்டுசுருதிகளிலே நட்பிற்பிறந்தன பதினொன்று, கிளையிற் பிறந்தன பதினொன்று. நட்பிற்பிறப்பினை வடநூலார் 'ஷட்ஜமத்திம சம்வாதித்வம்' என்பர், கிளையிற் பிறப்பினை 'ஷட்ஜ பஞ்சம சம்வாதித்வதம்' என்பர்.

இருபத்திரண்டின் அசைவெண் விகிதங்களையும் மேற்காட்டிய செய்கைமுறையின்படி ஒவ்வொன்றினுக்கும் கணித்துக்கண்ட சதவிலக்கங்களையும் கீழே தருகின்றாம். பிறவிவரங்களை மேற் குறித்தபடி மற்றொரு பகுதியிலே சுருக்கி விளக்குவாம்.

| நட்பு | | கிளை | |
|---|---|---|---|
| அசைவெண் விகிதம் | சதவிலக்கம் | அசைவெண் விகிதம் | சதவிலக்கம் |
| 256 : 243 | 90 | 16 : 15 | 112 |
| 10 : 9 | 182 | 9 : 8 | 204 |
| 32 : 27 | 294 | 6 : 5 | 316 |
| 5 : 4 | 386 | 81 : 64 | 408 |
| 4 : 3 | 498 | 27 : 20 | 520 |
| 45 : 32 | 590 | 64 : 45 | 610 |
| 40 : 27 | 680 | 3 : 2 | 702 |
| 128 : 81 | 792 | 8 : 5 | 814 |
| 5 : 3 | 884 | 27 : 16 | 906 |
| 16 : 9 | 996 | 9 : 5 | 1018 |
| 15 : 8 | 1088 | 243 : 128 | 1110 |

[தொடரும்]

ஸ்ரீ:

# அருளிச்செயற் பாடவமைதி

[ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.]

உ0-ஆம் பக்கத் தொடர்ச்சி.

11. மூன்றாந்திருவந்தாதி 12-ஆம் பாசுரத்தில்—

"* * * *—மறையென்றும்
நன்கோதி நன்குணர்வார் காண்பரே நாடோறும்
பைங்கோத வண்ணன் படி"

என்பது இக்காலத்துப் பாடம். இதனுள், பசுமை+ஓதம்=பைங்கோதம் என்று பண்பீறு திரிந்ததென்றும், பை—இங்கு (=தங்கிய)—ஓதம் என்று பிரித்தும் பொருள் கூறுவர். இச்சொற்புணர்ப்பும் பொருளும் ஏற்கத்தக்கனவாகா. பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தில்—

"ச்ரமஹரமான வடிவையுடையவனுடைய படி"

என்றே உள்ளது. 'ஓதம்' என்பதற்குரியபொருள் இதனிற் காணப்படாமை குறிப்பிடத்தகும். அதனால், அவ்வியாக்யானத்துக்கு ஏற்றவாறு, "பைங்கோல வண்ணன் படி" என்ற பாடம் இருந்து பின் மாறியதாகக் கருத இடமுண்டு. 'கார்க்கோலமேனியானை' என்ற கம்பர்வாக்கும் ஒப்பிடுக.

இனி, 'பங்கோத வண்ணன் படி' என்று பாடங்கொள்ளினும் பொருந்தும். பங்கோதம்—அளறுபட்ட கடல்; 'பங்கமார்கடல்' என்பர் (தேவா. திருவேட்டகுடி,5). பங்கு (-சேறு, பங்கம் என்பதன் திரிபு; சங்குபோல)+ஓதம் என்றேனும், பங்க (-சேறு)+ஓதம் என்றேனும் பிரித்துக்கொள்க. எவ்வகையினும், 'பைங்கோத வண்ணன்' என்பது திருத்தம்பெறத்தக்கது.

12. ஷ திருவந்தாதி, 27-ஆம் பாட்டில்—

"ஆரே துயருழந்தார் துன்புற்றார் ஆண்டையார்
* * நீரணைமேற் பள்ளி
அடைந்தானை நாளும் அடைந்து"

என்று பாடம் ஓதப்படுகின்றது. 'திருமாலையடைந்து துயருழந்தவரும் துன்பமுற்றவரும் யாவர், எங்குள்ளார்' என்பது பொருள். "எக்காலத்தில் எத்தேசத்தில் யார் அவனைப்பற்றி துஷ்கர்ம பலத்தை அநுபவித்தார்" என்பது வியாக்யானபங்தி. இக்கருத்தின்படியும், முன்பாட்டின் அந்தத்துக்கியையவும்—

"யாரே துயருழந்தார் துன்புற்றார் யாண்டையார்"

என்ற பாடமே பொருந்துவதாம். யாண்டையார் - எங்குள்ளார் எ-று. 'இன்று யாண்டையனோ தோழி' (குறுங். 379) என்ப. ஆண்டையார் எனின் அங்குள்ளார் என்றாகும். 'ஆண்டை - அங்கு; யார் - யாவர்' என்று பிரித்துப் பொருள்கூறலாம். அப்போது, ஆண்டை என்பது நின்றுவற்றுதலோடு பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்துக்கு இயைவதும் அன்று. "ஆண்டையார் - எங்குள்ளார்" என்று அச்சிடப்பட்டுள்ள அவ் வியாக்யானபங்தியினும் 'யாண்டையார்' என்று திருத்திக்கொள்க.

13. ஷ திருவந்தாதி 31-ஆம் பாசுரத்தில்—

"நறவேற்றன், பாகத்தான் பாற்கடலு ளான்"

என்பது வழங்கும் பாடம். நறவு ஏற்றான் என்பதற்கு நறவை ஏற்ற ருத்ரன் என்றும், நறவையும் ஏற்றையும் உடைய ருத்ரன் என்றும் இருபொருள்களை வியாக்யானம் கூறுகின்றது. "நறவு தேனாய், தேன் போலே போக்யமான கங்கையை உடையவன்" என்று அரும்பதம் இதற்கு விளக்கம் கூறும். பரம்பரையாக வழங்கிய பாடத்தை இப்பொருள்கள் நயப்படுத்துவனவே. ஆயினும், சப்தத்தை நெருக்கியே இப்பொருள் கொள்ளப்படுதலால், ஆதிப்பாடம் அவ்வாறு கொள்ளாதபடி அமைந்திருந்து பின் மாறியதுபோலும் என்றே கருத நேர்கின்றது. அப்பாடம்—

"நரையேற்றான் பாகத்தான்"

என்றே சொல்லலாம். நரையேறு-வெண்மைநிறமுடைய எருது.

"நரைவிடை நற்கொடியுடையநாதன்"(தேவா.திருநாரையூர்.திருத்தாண்.5)

"நரையார்ந்த விடையேறி" (ஷை, திருவொற். 4; திருப்பறிய. 7)

என்பர். எருத்துக்கு நரை என்ற பெயரு முண்டு; "கருநரைமேற் சூடேபோல்" (நாலடி.) எனக் காண்க. நரையேற்றையொப்ப, இடியேற்றையும் 'நரையுருமேறு' என்ப. இஃது, அதன் வெண்மையும் கடுமையும்பற்றி யாகும். இவற்றால் நரையேற்றான் என்பது நறவேற்றான் என யகர வகரங்களின் ஏகதேச எழுத்தொற்றுமையால், ஆதிப்பாடம் மாறியதாகக் கொள்ளத்தகும்.

திருப்பள்ளியெழுச்சி முதற்பாசுரத்தில், 'கனவிருளகன்றது' என்று ஓதப்படுவதாயினும், 'கனையிருள்' என்பதே தமிழ்வழக்கான பாடம்; 'கனையிருள்கடிவன' என்பர் (நீலகேசி. 455) நறவேற்றான்போல மாறி வழங்கியதே இக் 'கனவிருள்' என்க.

14. ஷை திருவந்தாதி, 96-ஆம் பாசுரத்தில்—

* * * — கேழ்த்த
அடித்தா மரைமலர்மேன் மங்கை மணாளன்
அடித்தா மரையாம் அலர்

என்று இப்போது ஓதப்படுகின்றது. 'கேழ்த்த அடித்தாமரை மலர்' என்பதற்கு 'நிறம்பொருந்திய தாளைக்கொண்ட தாமரைப்பூ' என்ற பொருளை அரும்பதம் கூறும். இப்பாசுரத்தின் மூன்றாமடியிலே, பின்மூன்றுசீர்களின் மோனையெழுத்துக்களை நோக்குமிடத்து, அவற்றுடன் இயையாதது இம்முதற்சீர்ப்பாடம் என்றும், அதனால், 'கேழ்த்த வடி' என்பதில், வகரத்தை உடம்படுமெய்யாக்கிப் பிரித்தமுறை பொருந்தாதென்றும் எளிதில் அறியலாம். ஆகவே,

"வடித்தா மரைமலர்மேல் மங்கை மணாளன்"

என்பதே ஏற்பதென்க. வடி-தேன்.

'வடியுறுமலர்' (சூளாமணி. இரதநூ. 45)

'வடிகொள்பொழிலின்' (தேவா. பக். 116. 3)

என்ற பிரயோகங்கள் காண்க. பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தில் அடி-தாள் என்ற பொருள் காணப்படாமையும் நோக்கத் தக்கது.

15. திருமழிசைப்பிரான் அருளிய நான்முகன் திருவந்தாதியில்—

“பாட்டும் முறையும் படுகதையும் பல்பொருளும்
ஈட்டிய தீயும் இருவிசும்பும்—கேட்ட
மனுவுஞ் சுருதி மறைநான்கும் மாயன்
தனமா யையிற்பட்ட தற்பு”

என்பது 76-ஆம் பாசுரம். இதனுள், ‘பாட்டும் முறையும்’ என்று ஓதப்படும் பாடத்துக்கு—‘பாசுரங்களும் இராமாயணமும்’ என்றும், ‘இயலும் இசையும்’ என்றும் பலபொருள் கூறுவர். பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானத்தில்— “இப்படிப் புராணங்களிற் பரக்கச் சொல்லப்பட்ட அர்த்தங்கள்” என்று முதலடிக்குப் பொருள் அமைந்துளது. இதன்படி நோக்குமிடத்து, ‘பாட்டுமுறையுமாய் அமைந்த புராணங்களிற் சொல்லப்பட்ட பல்வகைப்பொருள்களும்’ என்ற பொழிப்புடைய

“பாட்டு முறையும் படுகதையிற் பல்பொருளும்”

என்ற பாடம் அவர்காலத்து வழங்கியதுபோலத் தோற்றுகின்றது.* “கதையின் பெரும்பொருளாங் கண்ணு” என்ற பூதத்தார்பாசுரமும் ஒப்பிடத்தக்கது.

இனி, ‘பாட்டும் உரையும்’ என்ற பாடம் தமிழ்முறைக்குப் பெரிதும் ஏற்பதாகும். கத்தியரூபமும் பத்தியரூபமுமான காவ்யங்கள் என்பது பொருள். யாப்பின்வகைகளாகப் “பாட்டுரை நூலே” என்று தொல்காப்பியனார் கூறுகின்றார் (பொருளதி. 391). பெருங்கதை, சிந்தாமணிபோல்வன பாட்டுநூல். பெருந்தேவனார்

---

* ‘பாட்டு முறையும் படு—பாட்டும் முறையுமாய் அமைந்த; கதையில்—புராணங்களிற் சொல்லப்பட்ட; பல்பொருள்—பரந்த அர்த்தங்கள்’—என்று பிரித்துப் பொருள்கொள்க. பெரியவாச்சான்பிள்ளைவியாக்யானப்படி, இப்பாடம் கொள்ளப்பட்டது.

பாரதம், தகடூர்யாத்திரைபோல்வன உரைநூல்.* 'பாட்டுமுறையும்' என்ற தொடர் இக்கருத்தில் வழங்குவதென்பது—

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—மருடீர்ந்த
பாட்டு முறையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள"

என்று, எழிற்கோமானை ஔவையார் பாடிய அங்கதவெண்பா வாலும் அறிக (தொல். பொருளதி. 471, பேரா; தமிழ்நா...தை). 'பாட்டுமுறையும்' என்ற இப்பாடம், பெரியவாச்சான்பிள்ளை கொண்டதன்று என்று சொல்வதற்கு அவர் உரையில் ஆதார மில்லாமையும் நோக்குக.

16. சிறியதிருமடலில் திருமங்கைமன்னன்—

"பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே அம்மூன்றும்
ஆராயிற் றானே அறம்பொரு ளின்பமென்று
ஆரார் இவற்றி னிடையதனை யெய்துவார்
சீரார் இருகலையும் எய்துவர் சிக்கெனமற்று
ஆரானு முண்டென்பார் என்பது தானதுவும்
ஓராமை யன்றே உலகத்தார் சொல்லுஞ்சொல்
ஓராமை யாமா றதுவுரைக்கேன்"

என்று பாடியருளுதல் பலரும் தெரிந்ததே. "உலகோர்கூறும் புருஷார்த்தங்கள் அறம்பொருளின்பம் என்ற மூன்றேயாம். வேறொன்றும் உண்டு என்பது அறியாமை. அவ்வறியாமையை விளக்கிக் கூறுவேன்" என்று மடலெடுக்கப்புகுந்த தலைவி, தொடக்கத்தே கூறுவது இது. ஈண்டு, "அறம்பொருளின்பமென்று இவற்றின் இடையதனை எய்துவார்.........இருகலையும் எய்துவர்" என்பதன் வியாக்யானத்தே ஸ்ரீ பெரியவாச்சான்பிள்ளை—

---

* உரைநூல் என்றது, முழுதும் வசனமாகவன்றிப் பெரும்பான்மை உரையும் சிறுபான்மை பாட்டும் உள்ள உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளை என்க.

> "நடுவண தெய்தின் இருதலையும் எய்தும்" என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறார் அன்று. இவைமூன்றிலும் வைத்துக்கொண்டு, அதனை எய்துவார் என்றது, தமக்கு உத்தேசியமான காமத்தை எய்துவார் என்றபடி. ......இத்தை லபிக்கும் ஸம்பத்தை உடையவர்கள் இதுக்குக் கலாமாத்ரமான தர்மார்த்தங்கள் இரண்டையும் லபித்தாராகக்கடவர்"

என்று அருளிச்செய்தார். இப்பெரியார் தமக்குமுன்பு வழங்கிய 'இருகலையுமெய்துவர்' என்ற பாடத்தைத் தழுவி, பகவத்விஷய காமமே தன் உத்தேசியமாகத் தலைவி கொண்டவளாதலால், அக் காமத்தை அடைந்தவர்கள் அதன் கலாமாத்ரமான (=ஏகதேசமான) அறம்பொருள்களையும் அடைந்தவர்களாவர் என்ற கருத்தில் அவள் கூறியதாக எழுதியபொருள் போற்றத்தக்கதே. இதன்படி,

> "அவற்றினிடை - அறம்பொருளின்பங்கள் தம்மில்; அதனை எய்துவார் - அக்காமத்தை அடைபவர்; இருகலை - அக்காமத்துக்குக் கலாமாத்ரமான (ஏகதேசங்களான) தர்மார்த்தங்கள்"

என்று பொருள்கொள்க. இனி, '"நடுவணதெய்தின் இருதலையும் எய்தும்" என்று தமிழர் சொல்லுகிறபடியே சொல்லுகிறார் அன்று' என்று பக்ஷாந்தரமொன்றையும் கூறி அப்பெரியார் மறுத்தெழுதுவதால், 'இருதலையுமெய்துவர்' என்ற பாடமும் அவர்க்குமுன் வழங்கியதாகவே தெரிகின்றது. இத்தமிழர்கூற்று—

> "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
> நடுவண தெய்த இருதலையு மெய்தும்
> நடுவண தெய்தாதா னெய்தும் உலைப்பெய்து
> அடுவது போலுந் துயர்"

என்ற நாலடியார்ப்பாட்டில் உள்ளது. [ஈண்டு, மூன்றில்-அறம்பொருளின்பங்களில்; நடுவணது-இடையிலுள்ள பொருள்; இருதலை-அறம் இன்பங்கள்; 'இருதலைக்கொள்ளி' என்ப.]

இம்மேற்கோளின்படி, 'வையத்துமன்னிய மூன்று' என்பதனோடு இம்மடலிலுள்ள 'பாரோர் சொலப்பட்ட மூன்று' என்பதும், 'நடுவணதெய்தின்' என்பதனோடு 'இடையதனை எய்துவார்' என்பதும், 'இருதலையும் எய்தும்' என்பதனோடு 'இருகலையும் எய்துவர்'

என்பதும்—சொல்லாலும் பொருளாலும் பெரிதும் ஒப்புமை பெற்றிருத்தல் அறியலாம். இக்கருத்தையே—

"அறனீனும் இன்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்" (குறள்.)

என்று வள்ளுவனாரும் கூறினர். இவ்வாறு, முன்னூற்கருத்தோடு பெரிதும் ஒப்புமைகொண்ட பாடமே, இருந்தமிழ்நூற்புலவரான ஆழ்வார்க்குந் திருவுள்ளமானது என்று தமிழறிஞர்கள் கருதக் கூடியதேயாகும். ஆயின், காமத்தையே சிறப்பிக்கப்புக்க திருமங்கைமன்னன், அறமும் இன்பமும் பொருளால் அடையக் கூடியவை என்று ஈண்டுக் கூறியதென்னே? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு—

'ஐஹிகமான புருஷார்த்தங்களுள் ஒன்றாகிய இன்பம் என்பது, விஷயாந்தரகாமம் அல்லது சிற்றின்பமாகும். அஃது இடையிலுள்ள பொருளால் அடையக்கூடியதே. ஆமுஷ்மிகமான நான்காவது புருஷார்த்தம் ஒன்றில்லை. பகவத்விஷயகாமம் அல்லது பேரின்பப்பேறே அது. இம்மையிலே, திருநறையூர் எம்பெருமானைக் கூடிக்கலத்தலே அப்பேறாகும். அஃது எளிதில் அடைய முடியாதிருப்பதால், மடலேறுதலாகிய கடினமார்க்கத்தால் அதனை அடையத்துணிகின்றேன்' என்றும் 'சிற்றின்பப்பேற்றை அந்த மார்க்கத்தால் முன்புபெற்ற மகளிர்போலவே, அப் பேரின்பப்பேற்றையும் அவரது முறையில் நின்று யான் அடைவது திண்ணம்' என்றும் தலைவி கருதிக் கூறுகின்றாள்—என்பது இத்திருமடலின் கருத்தாகக் கொள்ளத்தகும். எனவே, தலைவியின் உத்தேசிய இன்பமானது, ஐகிகமான சிற்றின்பத்தின்வேறானது என்பது பெறப்படுதலால், பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளத்துக்கும் மேற்கூறிய கருத்து மாறுபடாமை காண்க. இதனால், 'பாரோர் சொலப்பட்ட' அச்சிற்றின்பப்பேற்றுக்குப் பொருள்கருவியாவது என்ற ஆழ்வார் திருவாக்குப் பொருந்துமாறு அறியத்தக்கது.

17. பெரியதிருமடலில் வேகவதி என்பவளது வரலாற்றைத் திருமங்கைமன்னன்—

"பின்னும், கருநெடுங்கட் செவ்வாய்ப் பிணைநோக்கின்
மின்னனைய நுண்மருங்குல் வேகவதி யென்றுரைக்கும்
கன்னிதன் இன்னுயிராங் காதலனைக் காணாது

தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத் தான்சென்றங்கு
அன்னவனை நோக்கா தழித்துரப்பி வாளமருள்
கன்னவில்தோட் காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய்ப்
பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே"

என்ற கண்ணிகளிற் கூறுவர். இங்கு, பெரியவாச்சான்பிள்ளை அருளிய வியாக்யானத்தின்பதிப்பில் "இதற்குக் கதைதெரிய வில்லை" என்ற கீழ்க்குறிப்பு இடப்பட்டுளது. ஊகமாகக் கதை கற்பித்தாரும் உளர். ஆனால், குணாட்யரது பிருஹத்கதையின் வழி நூலான பெருங்கதையிலும்,* வடமொழியிலுள்ள நரவாகனதத்தன் சரிதத்திலும்† இம்மடல்வரலாற்றின் விவரம் தெளிவாகக் காணப் படுவதாம். அதன் சுருக்கம் வருமாறு:—

உதயனகுமாரனான நரவாகனதத்தன், கணிகையர்குலத்தவளும் ஒப்புயர்வற்ற கட்டழகியுமான மதனமஞ்சுகையைக் காதலித்து மணந்து வாழ்ந்துவந்தனன். அக்காலத்தே, மானசவேகன் என்ற வித்யாதரவேந்தன் அவளைக் கண்டு மோகித்து நரவாகனனை மயங்கும்படி செய்துவிட்டு, மதனமஞ்சுகையைத் தூக்கிச்சென்று தன் நகர்க்குக் கொண்டுவந்துவிட்டான். உறங்கி விழித்த நரவாகனன் காதலியைக் காணாமல் மயங்கி தன் நகர்ப்புறங்களில் தேடித் திரிந்தனன். இஃது இவ்வாறாக, மேற்கூறிய மானசவேகன் தங்கை வேகவதி என்பாள் அந்த நரவாகனதத்தனிடம் மோகங்கொண்டு,

---

* பெருங்கதை நரவாணகாண்டத்தின் பிற்பகுதி கிடையாமையால் உதிதோதயகாவ்யம் முதலிய வடநூல்களிலிருந்து அப் பிற்பகுதிக்கதையை, உதயனன்சரித்திரச்சுருக்கத்தில் மஹாமஹோபாத்யாய—ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள். அக்கதாபாகத்தில், வேகவதிவரலாறு சிறுமாறுபாடுகளுடன் காணப்படுகின்றது (பக். 119-201).

† புதஸ்வாமி என்பார் இயற்றிய நேபாளமான்மியத்திலே, 'பிருகத் கதா ச்லோகஸங்க்ரஹம்' என்ற பகுதியில், உதயனன்சரிதம் சுருக்கமாகவும், அவன்மகன் நரவாகனதத்தன்சரிதம் பெருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன என்றும், பின்னவனான நரவாகனன் மணந்த மனைவியர்பலருள் அறுவருடைய கதைகளே இப்போது கிடைப்பன என்றும், இக்கதை 'வேகவதீலாபம்' என்ற ஸர்க்கத்தில் விவரிக்கப்படுவது என்றும் கூறுவர் (சோமசுந்தரதேசிகர் வெளியிட்ட நரவாகனதத்தசரிதம், பக். 2; 21-23).

மதனமஞ்சுகையின் வடிவோடு அவனிடம் நெருங்கிப் பழகிவந்தாள். ஒருகால் தன் உண்மைநிலையை அவனுக்கு உணர்த்தநேர்ந்த போது, அவள் பின்வருமாறு கூறலாயினள்.

"என்பெயர் வேகவதி. என் தமையன், வித்யாதரவேந்தனுன மானதவேகன் என்பான். அவன் மதனமஞ்சுகையைத் தூக்கிச் சென்றனன். ஆனால், ஒருசாபத்தால் அவளுக்குத் தீங்கொன்றும் செய்ய இயலவில்லை. அவளைச் சிறைவைத்து என்னைப் பாதுகாக்கும்படியும், நற்புத்திபுகட்டித் தன்னை மணந்துகொள்ளுமாறு தூண்டும்படியும் வேண்டினன். மதனமஞ்சுகையோ, எப்பொழுதும் அழுதகண்ணுடன் உன் பேரெழிலையும் பெருமைகளையுமே பேசியும் நினைந்தும் வருந்தினள். அதனால் நான் அவள்மேல் இரக்கங் கொண்டு, அவளுடைய நிலைமைகளை உன்னிடஞ் சொல்வதாக ஏற்றுக்கொண்டேன். அவள் வார்த்தைகளால் எனக்கும் உன்னைக் காணும் விருப்பம் பெரிதும் உண்டாயிற்று. உன்னைக் கண்டபின் உன்பால் உண்டான காதல்மிகுதியால் மதனமஞ்சுகைக்குச் சொன்னசொல்லைக் காப்பாற்ற என்னால் முடியவில்லை. இனி, மதனமஞ்சுகை உள்ள இடத்துக்கு உன்னை அழைத்துச்செல்லுகிறேன்" என்று கூறி, வேகவதி தன் இயற்கையுருவோடு அவன்முன் தோன்றினள். தோன்றியவளைக் கண்ட நரவாகனன் காதல்மிக்கவனாய் அவளைக் கலந்து மணந்து, மதனமஞ்சுகையையும் மறக்கலாயினன்.

மானதவேகன், தன் தங்கை வேகவதியைக் காணமையால் வருந்தி அவளைத் தேடச்சென்றவன், முடிவில் அவள் நரவாகனனோடு வாழ்வதைக் கண்டனன். ஒருநாள் நரவாகனன் உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது இவ்விஞ்சைவேந்தன் அவனை ஆகாய மார்க்கமாகத் தூக்கிச்செல்ல, நரவாகனன் வழியில் விழித்துக் கொண்டான். அக்காலத்தில் இருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று. கீழே, உறங்கி விழித்துக்கொண்ட வேகவதி தன் காதலனைக் காணது திகைத்து, நடந்ததை அறிந்தவளாய், விண்ணிடை விரைந்து பறந்துசென்று, தன் தமையனைச் சந்தித்து அவனுடன் பெரும்போர் புரியலானுள். அதனில், மானதவேகன் நரவாகனனைக் கைவிட்டுவிட வேண்டியதாயிற்று. அதனால், அந்தரத்தினின்று

வீழ்ந்த அவனை அமிர்தபதி என்ற அவனது பழைய நண்பன் காப்பாற்றினன். பின்பு, வேகவதி தன் காதலனுன நரவாகன தத்தனை அடைந்து இன்புற்று வாழ்ந்தனள் என்பது அவ்வரலாறு.

இவற்றால், பெருங்கதையிலும் நரவாகனசரிதத்திலும் கண்ட வேகவதீலாபமென்றகதையே திருமங்கையார் பாடியருளிய வேக வதி வரலாறு என்பது நன்குதெரியவரும்.

இனி, மேற்கூறிய மடற்கண்ணிகளில் "வேகவதி....வாளமருள் .......காளையைக் கைப்பிடித்து" என வருவதனால், மானதவேகன் தன் முன்ரோன்றலாயினும் வேகவதி அவனைப்போரில்வென்று தன் கணவனைக் கைப்பற்றிய செய்தி அறியப்படும். மேலேகாட்டிய நரவாகனசரிதத்தில், வேகவதிக்கும் அவள் தமையனுக்கும் ஆகா சத்தில் போர் நடந்ததாகக் கூறப்பட்டுளது. இதனால், அச்சரிதத் துக்கு ஏற்ப, மடலில் 'வாளமருள்' என்றுள்ளது 'வானமருள்' என்று ஆதிப்பாடமாக அமைந்திருந்ததுபோலும். வான் அமர் - ஆகாசப்போர். னகர ளகரங்கள் ஏட்டெழுத்துக்களில் மாறிய இடங்கள் பலவாம்.

இக்கதைபோலவே, சிறியதிருமடலில்—

"வாரார் வனமுலை வாசவ தத்தையென்று
ஆரானுஞ் சொல்லப் படுவாள் அவளுந்தன்
பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தளைக்காலன் பின்போனள்
ஊரா ரிகழ்ந்திடப் பட்டாளே"

என்று இவ்வாழ்வார் பாடிய வரலாறு,மேற்கூறிய நரவாகன னுடைய தந்தை உதயனனால் காதலித்து மணக்கப்பெற்ற வாசவதத்தை யின் சரிதம் என்றும், மேற்கூறியது அவன்மகனைக் காதலித்தவ ளது சரிதம் என்றும், இவற்றுக்கெல்லாம் மூலம் குணாட்யாது பிருகத்கதையும், அதன் வழிநூல்களுமே என்றும் நாம் அறிய லாகும்.

[தொடரும்]

# கம்பராமாயணசாரம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

## ஏழாவது உத்தரகாண்டம்*

யுத்தகாண்டத்துக்குப் பிந்தினகாண்டம், யுத்தகாண்டச் செய்திகளுக்குப்பின் நிகழ்ந்த செய்திகளைத் தெரிவிப்பது.

(உத்தரம் - பிந்தினது)

## முதலாவது திருவோலக்கப்படலம்

இராமன் இராசசபாமண்டபத்தில் கொலுவீற்றிருப்பதைக் கூறுவது.

கடவுள்வணக்கம்

1 வெள்ளியங் கிரியை மீதே வேரொடு மெடுத்த வீரக்
கள்ளவன் புயநா லைந்துங் கன்கமா மௌலி பத்தும்
துள்ளியம் புவிமேல் வீழ வொருகணை தொடுத்து விட்ட
வள்ளலம் புயமே யன்ன மலரடி வணக்கஞ் செய்வாம்.

---

* All Rights Reserved by the author.

கம்பராமாயணசாரம் திருமுடிசூட்டுப்படலத்தின் முடிவிலுள்ள அடிக்குறிப்பில் ('செந்தமிழ்' தொகுதி ௩௯ பக்கம் ௩௯௪) இறுதியில் கூறியிருக்கிற காரணங்களால் உத்தரகாண்டம் கம்பர்வாக்கன்றென்றுகொண்டு, கம்பராமாயணசாரம் யுத்தகாண்டமுடிவில் 'கம்பராமாயணசாரம் முற்றுப்பெற்றது.' என்பது எழுதப்பட்டது. இதன்பின், திருப்பனந்தாள் மடத்துத் தலைவரவர்கள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாததம்பிரான்சுவாமிகளவர்கள் 'கவிச்சக்கரவர்த்தி கம்பர்ஞாபகார்த்தத் தமிழ்ப்பரிசு' ஏற்படுத்தியிருப்பது தெரியவந்தது. அந்தப் பரிசுசம்பந்தமாகக் கம்பராமாயணத்தைக் குறிக்குமிடத்தில் "கம்பராமாயணம் உத்தரகாண்டத்துடன்" என்ற விவரம் காணப்படுதலால், அந்தப் பரிசுக்காகப் படிப்பவர்களுக்கு உதவியாகும்படியும், உத்தரகாண்டம், பரம்பரைபரம்பரையாகக் கம்பர்வாக்கன்றென்று கருதப்பட்டுவந்திருந்தும்,கம்பராமாயணத்தோடு சேர்க்கப்பட்டுவந்திருக்கிற வழக்கப்படியும் 'கம்பராமாயணசார'த்துடன் சேர்க்கப்படுகின்றது.

கொண்டுகூட்டு: வெள்ளியங்கிரியை வேரோடும் மீதே எடுத்த வீரக் கள்ள வன் புயம் நாலைந்தும் கனக மா மௌலி பத்தும் அம்புவிமேல் துள்ளி வீழ, ஒருகணை தொடுத்துவிட்ட வள்ளல் அம்புயமே அன்ன மலர் அடி(களை) வணக்கஞ்செய்வாம்.

பொருள்: கைலாசபருவதத்தை வேரோடும் (பிடுங்கித் தூக்கித் தலைக்கு) மேலாக உயர்த்திய (இராவணனுடைய) வலிய தோள்கள் இருபதையும் தங்கமுடி (தரித்த தலை)கள் பத்தையும் பூமியிலே துள்ளிவிழும்படி ஒருபாணம் தொடுத்துவிட்ட இராம பிரானுடைய தாமரைமலர்போன்ற பாதங்களை வணங்குவோம்.

வெள்ளி அம் கிரி - வெள்ளிமலை - கயிலாயமலை. புளியங்காய் என்பதிற் போல, வெள்ளியங்கிரி யென்பதில் அம் சாரியை. கள்ளம் - வஞ்சனை; இராவணனுடைய வஞ்சனையை அவன்தோள்மேலேற்றிக் கூறினர். வன் புயம் - வலியதோள். கனக மா மௌலி - பொன்னாற்செய்த பெரிய கிரீடம்; இங்கே மௌலி ஆகுபெயராய் மௌலி அணிந்த தலையை உணர்த்தியது. அம்புயம் - தாமரை.

தலையும் தோளும் என்றுகூறாது தலை பத்தும் தோள் இருபதும் என்றதும் கணையென்னாது ஒருகணையென்றதும், எய்தது ஒரே கணையாயினும் அது கொய்தது (ஓர் உறுப்பு இரண்டுறுப்பல்ல) முப்பது உறுப்புக்களென வியப்புண்டாகக்கூறி இராமனது அபார வில்வன்மையை உணரச்செய்தவாறும்.

## இராமன் அரசிருக்கை

பகைவரை வென்று தருமம் தழைத்தோங்கும்படி ஏகசக்க ராதிபதியாக அரசாளும் இராமன், சிங்காதனத்தின்மீதே, வெண் கொற்றக்குடை பூரணசந்திரன்போல விளங்க, திருமேனிமீது குளிர்ந்தகாற்றுப்படும்படி இருபக்கத்திலும் மாதர்கள் நின்று வெண்சாமரம்வீச, வேதியர்கள் ஆசிகூற, வேந்தர்கள் ஏவல்கேட்க, கரியமலையுச்சியிற் சூரியோதயமானதுபோலச் சென்னிமீதே இரத்தி னம் இழைத்த செம்பொற்கிரீடம் அணிந்து, பாற்கடலைக் கடையப் பாம்புவடம்பூட்டப்பட்ட மந்தரமலைபோலத் தோள்களில் வாகு வலயம்பூண்டு, முத்தாரமும் மாணிக்கமாலையும் புனைந்து, நாகரத்தி னக்கோவை கோத்த பொன்னாடை பொலிந்துவிளங்க, அரசுவீற் றிருந்தான்.

## இராமனது அரசிருக்கைமண்டபத்துக்கு முனிவர் வருகை

அப்போது அகத்தியன், சமதக்கினி, பாரத்துவாசன், கௌதமன், விசுவாமித்திரன், காசிபன், அத்திரி, தௌமியன் முதலிய முனிவர்கள் அயோத்திக்கு வந்து அரசிருக்கைமண்டபத்தை அடைந்து, 'எம் வரவைச் சக்கரவர்த்திக்குத் தெரிவி' யென்று வாயில்காப்போனுக்குக் கூற, அவன் சென்று அடிபணிந்து தெரிவித்து அவர்களை அழைத்துவரும்படி பணிக்கப்பெற்றவாறு செய்ய, வந்தமுனிவர்களை இராமன் உவகைமீதூர எழுந்து எதிர் சென்று மணிமுடி மண்மீதுபடிய வணங்கினன்.

## இராமன் முனிவருக்கு ஆசனம் அளித்தல்

2 ஈச னங்க மெரித்திடு நாண்முதற்
கூச னங்கன் குறுகா வருந்தவ
மாச னங்கண் மகிழ்ந்தினி தேறிட
ஆச னங்கள் வழங்கி யருளினன்.

கொண்டுகூட்டு: ஈசன் அங்கம் எரித்திடும் நாள்முதல் கூசு(ம்) அனங்கன் குறுகா(த) அரும் தவ மாசனங்கள் மகிழ்ந்து இனிது (ஆக) ஏறிட ஆசனங்கள் வழங்கியருளினன்

பொருள்: (தவசியர்போலச் சடைமுடியுடையனாய்த் தவஞ் செய்துகொண்டிருந்தசிவன் மோகங்கொள்ளும்படி தான்-மன்மதன்-பூ அம்பு எய்தபோது, அந்தச்) சிவன், (தன் - மன்மதனது) உடலை (ச் சாம்பலாகும்படி நெற்றிக்கண்ணால்) எரித்தநாள்முதலாக (ச் சிவன்போலச் சடையுடைய தவசியர்திறத்தில், சிம்மசொப்பனங் கண்ட யானைபோல) அஞ்சுகின்ற மன்மதன் அணுகாதவரான முனிவர்கூட்டம் மகிழ்ந்து இனிதாக ஏறி வீற்றிருக்கும்படி (அவர்களுக்கு இராமன்) ஆசனங்கள் அளித்தருளினன்.

அங்கம் - உடல். கூசுதல் - அஞ்சுதல். அனங்கன் - மன்மதன். குறுகுதல் - அணுகுதல். மாசனம் - மகாசனம் - பெருமை (உடைய) சனங்கள் - உயர்ந்தோர்கூட்டம். அங்கம் (-உடம்பு.) உடையவனாயிருந்த மன்மதன் சிவனால் எரிக்கப்பட்டு அனங்கன் (-அங்கமில்லாதவன் - அரூபி) ஆனதைக் குறிப்பித்தலால், இங்கே 'அனங்கன்' என்பது மன்மதனுக்குக் கருத்துடைப் பரியாயநாமமாகவிருத்தல் கவனித்துணர்ந்து களிக்கத்தக்கது.

முன் ஒரு துறவியை (சிவனை) அணுகி உடலையிழந்தோம், இனித் துறவியரை அணுகினால் உயிரையிழக்கும்படி நேருமென்று பயந்து மன்மதன் நெருங்காத துறவியர்கூட்டமென்பார், 'கூசும் (அஞ்சும்) அனங்கன் குறுகா அருந்தவ மாசனம்' என்றார். இதனால் வந்த முனிவரெல்லாரும் மையலை அறவே துறந்தவரென்பது போதரும். இந்தப் பாட்டு இனிய திரிபாக இயற்றப்பெற்றது.

சிவனைத் துறவியெனல் மரபென்பது, பின்வரும் காஞ்சிப்புராணப்பாட்டினால் விளங்கும்.

காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக்
    கவின்றகல் லாடைமேற் புனைந்து
யாமெலாம் வணங்கும் துறவியென் றிருந்தும்
    ஒருத்திதன் இளமுலைச் சுவடு
தோமுறக் கொண்டார் எனச்சிறை யிடல்போற்
    சுடர்மனக் குகையு ளேகம்பத்
தோமொழிப் பொருளை யடக்கியா னந்த
    முறுநர்வாழ் இடம்பல அவண.

கல்லாடை - காவிவஸ்திரம். தோம் - குற்றம். ஓம் - பிரணவம். உறுநர் - உறுகிறவர் - அடைகிறவர். அவண - அவ்விடத்தன - அங்கே உள்ளன.

## இராமன் முனிவரைச் சேமம் விசாரித்தல்

பின்பு இராமன், அந்த முனிவரைநோக்கி 'உங்கள் தவம் செவ்விதுநடக்கின்றதா? எங்களுக்கு உயிர்போன்ற உங்களுக்கும் உங்கள் புத்திரர் பௌத்திரர்களுக்கும் உங்களைச்சார்ந்தவர்களுக்கும் எவ்வகைத்துன்பமும் இல்லையே?' என்று சேமவிசாரணைசெய்தான். அவன் அமுதவாக்கைக் கேட்ட முனிவர்கள், மனமகிழ்ந்து விடைகூறுவாரானர்.

## முனிவர்கள்விடை

'புலத்தியமுனிவர் மரபிற் பிறந்த நல்லொழுக்கமுடைய *விச்சிரவசுமுனிவர்க்கு †கேகசியென்னும் இராட்சசிவயிற்றிற்பிறந்த

* விச்சிரவசுமுனிவர் - இராவணன் தந்தை.
† கேகசி - இராவணன் தாய்.

கொலைகார இராக்கதர்கூட்டங்களைக் கொன்ற வலிமையுடைய நீயிருக்கும்போது, எங்கள்தவம் தவறுதல் உறுமோ? கும்பன் நிகும்பன் அகம்பன் தேவாந்தகன் நராந்தகன் மகோதரன் அதிகாயன் கும்பகன்னன் இராவணன் முதலிய இராக்கதரைக்கொன்று அவர்கள் உடல்களைப் பேயும் நாயும் பிய்த்துத்தின்னும்படி அம்பு தொடுத்துவிட்ட கோதண்டபாணியான நீ இருக்க, எங்களுக்கும் எங்களைச்சார்ந்தவர்களுக்கும்எவ்வகைத் துன்பமும்உண்டாகுமோ? மும்மூர்த்திகளாலும் முனிவர்களாலும் மூன்றுலகங்களிலுமுள்ள வேறு யாவராலும் வெல்லற்கரியவனும் எல்லா மாயைகளும் வல்லவனும் தேவேந்திரனைப்பிடித்துச் சிறையிலிட்டவனுமான இந்திரசித்தென்னும் பாவியின் தலையை அறுத்த இலக்குமணன் இருக்கும்போது எங்களுக்குப் பயம் உண்டோ?'* என்று முனிவர் விடைகூறினார்கள்.

## இராவணாதியர்வரலாறுகூறும்படி முனிவரை இராமன் வேண்டுதல்

அப்போது, இராமன் அந்த முனிவர்களைநோக்கி 'இராவணாதியர் வீரச்செயல்களைச் சுருக்கமாகக் கூறினீர்கள். அவர்கள் பிறப்பு வரலாறும் வரங்கள்பெற்றவரலாறும் அவர்கள் வலிமை முதலியவைகளும் தெரியும்படி விரிவாகக் கூறுங்கள்' என்று இராமன்கூற, ஏழுகடல்களையும் ஒருகையால் வாரியுண்ட அகத்தியமுனிவன் கூறுவானானான்.

க-வது திருவோலக்கப்படலம் முற்றிற்று

---

* மூவராலும் மற்றொழிந்த முனிவராலும் மூன்றுலகத்து
யாவராலும் வெலற்கரிய, எல்லா மாயை களும்வல்ல
தேவராசன் தனைப்பற்றிச் சிறையி லிட்ட இராவணியாம்
பாவகாரி சிரம்அறுத்தோன் இருக்க, எமக்குப் பயமுண்டோ ?

இராவணி - இராவணன்மகன், பாவகாரி - பாவம்செய்வோன்.

## புலத்தியப்படலம்

இராவணன்குலமுதல்வனான புலத்தியமுனிவன்வரலாறு கூறுவது.

### புலத்தியன் சபித்திடல்

'திருமாலுடைய உந்திக்கமலத்தில் உதித்த பிரமதேவனுடைய புத்திரன் புலத்தியனென்பவன்; அவன் மகாமேருபருவதத்தையடைந்து அம்மலையிலே ஒருதபோவனத்திலே தவஞ் செய்துகொண்டிருந்தான். அந்த வனத்துக்குப் போகலோகமான தேவலோகமாதரும் பாதாளலோகமான நாகலோகநங்கையரும் பூலோகத்து முனிவர்குமாரிகளுமாக மூன்றுலோகத்துப் பெண்களும் நாள்தோறும்வந்து தங்கள்தங்களுக்குப் பிரியமான பூக்களைத் தேடிப் பறித்துச் சூடிக்கொள்ளுதலும், பிரிந்த தோழியரைத் தேடியலைந்து கண்டுபிடித்துக் களித்துக் கூடுதலும், அந்தவனத்துத் தடாகத்தில் நீராடுதலும், ஆடல்பாடலோடு விளையாடலும் செய்து வந்தனர். அதனால் தவஞ்செய்துகொண்டிருந்த புலத்தியன் மன அமைதிகுலைந்து நிட்டைகலைந்ததனால் கோபமூண்டு அந்த மாதரெதிரேபோய்ப் "பெண்களே! இனி எப்போதாவது யானிருக்கின்ற இடத்துக்கு வருவீரானால், கருத்தரித்தவராவீர்களாக" என்று சபித்தான். உடனே அந்தப் பெண்களெல்லாம் அஞ்சி வேறுவேருகப் பிரிந்து பல திசைகளிலும் ஓடிப்போனார்கள்'.

### குணவதி கருவுறல்

'திருணவிந்துமுனிவன்மகள் மேற்கூறிய சாபத்தையறியாளாய், அந்த வனத்துக்கு வழக்கமாக வந்துகொண்டிருந்த பெண்களோடு விளையாடுதற்கு அவர்களைத் தேடி வந்தாள். வந்தவள், அங்கே தண்டு கமண்டலதாரியாய் வேதமோதிக்கொண்டிருந்த புலத்தியமுனியைக் கண்டவுடனே கருப்பவதியானாள். அதனால், மேனி வெளுப்பும் கண்கள் பசப்பும் உற, எதனால் அவை உண்டாயினவென்று தெரியாளாய்த் தந்தையை அடைந்து வணங்க, அவன் அவள் தேகமாறுபாட்டுக்குக் காரணம் யாதெனவினவ, அவள் "தோழியரைத்தேடி வனத்துக்குப்போனேன். அங்கே புலத்தியமுனிவனிருக்குமிடத்தை யடைந்தேன். உடனே

என் உடல் இம்மாறுதலை அடைந்திட்டது." என்றாள். அவன் யோகமுறையில் தியானத்தில் அமர்ந்து அந்தர்முகமாகநோக்கிப் பூர்வநிகழ்ச்சிகளைப் பூரணமாகத் தெரியலானான். உடனே, அவளையழைத்துக்கொண்டு புலத்தியமுனிவனை அடைந்து, "சான்றோனே! இந்தக் குணவதி என்மகள், உன்மனைவியாகுதற்குரியசிறந்த குணமுடையவள். ஏற்றுக்கொள்" என்று அவளைக் கன்னிகாதானமாகக் கொடுத்தான். அதுமுதலாக, அவள், அம்முனிவன் பணிவிடைகளை அவன்மனம் உவப்பச்செய்து அவனுக்கு இனியளாக ஒழுகினாள்'.

### விச்சிரவசு வரலாறு

'அவன் அவள்மீது மிகுந்த கருணையுடையவனாகி "நான் வேதம் ஓதிக்கொண்டிருந்தபோது உன் தோழியரைத் தேடிவந்த நீ வேதவொலி கேட்டாயாதலால், விச்சிரவசு* என்னும் சற்புத்திரனைப் பெறுவாய்" என, அவள் மனம் மகிழ்ந்தாள். உரியகாலத்தில் விச்சிரவசுவையீன்றாள். அவன் தந்தையின் அறவொழுக்கப்படி ஒழுகிவந்தான். அவனுக்கு மனைவியாகும்படி பரத்துவன் தேவவன்னியென்னும் தன் மகளைக் கன்னிகாதானமாகக் கொடுத்தான். அவளுக்கு மகன் பிறந்தபோது பிரமன் இந்திரன் முதலிய தேவசிரேட்டர்கள்வந்து அந்த மகனை இனிதுநோக்கி வைச்சிரவணன்† என்று பெயரிட்டு வாழ்த்திப்போனார்கள்'.

### குபேரன் வரலாறு

'வைச்சிரவணன் வளர்ந்து கல்விபயின்று வேதமோதி வேதாந்தப்பொருளையுணர்ந்து தவஞ்செய்யும் விருப்பமுடையனாய் ஒரு தபோவனத்தையடைந்து தீவினைநீங்க நல்வினை ஓங்கத் தவஞ்செய்வானானான். சிலகாலம் நீரும் சிலகாலம் வாயுவும் உணவாகக்கொண்டு கடைசியாக எவ்வகையுணவுமில்லாதவனாய்ப் பல ஆண்டுகள் தவஞ்செய்தான். அவன்முன், பிரமதேவன் பிரசன்னமாகி "உன்னை ஒப்பவர் ஒருவரும் இல்லை. நீ வேண்டும் வரங்களெல்லாம் தருவேன். வேண்டிப் பெற்றுக்கொள்" என்றான். வைச்சிரவணன் "இந்திரன் இயமன் வருணன்போல நான் ஒரு திக்குப்

---

* இது விச்சிரவா, விச்சிரவாகு என்றும் வழங்கும்.

† இது குபேரன்பெயர்.

பாலகனாகவும் உயர் வொப்பற்ற நீதிபதியாகவும் வரம் தந்தருள்க" என்றான். அவனுக்கு அந்த வரங்களோடு சூரியன் தேரினும் அதி வேகமாகச் செல்வதாய் மனோவேகமுடையதாய் ஈரேழுலகத்தோரும் ஏறினும் மிச்சஇடமுடையதாயுள்ள புட்பகவிமானமும் கொடுத்து "நல்வாழ்வு வாழ்வாயாக" என வாழ்த்துக்கூறிப் பிரம தேவன் போனான்'.

'வைச்சிரவணன், புட்பகவிமானத்திலேறித் தன்தந்தை விச்சிரவசுமுனிவனிடம்சென்று வணங்கிப் பிரமதேவனிடம் பெற்றவைகளெல்லாவற்றையும் கூறியபின், "இவையெல்லாம் தந்த பிரமன், 'இன்னதானத்தில் இரு' என்று சொன்னானில்லை. நீ, பகைவர் அணுகுதற்கரியதும் சுவர்க்கம்போல்வதுமான ஒரு வாசத்தலத்தை வழங்கியருள்வாயாக" என, முனிவன், "இலங்கை மாநகர் இராக்கதருக்கு இருப்பிடமாயிருந்தது. அவர்கள் திருமாலோடு போராடித்தோற்றுப் புறங்கொடுத்தோடிப் பாதாளலோகத்தில் பதுங்கி ஒளித்திருப்பாராயினர். நீ அந்த நகரத்தை உனக்கு உறைவிடமாக்கிக்கொள்" என்று உரைத்தான்'.

'வைச்சிரவணன், தந்தையை வணங்கி, "நீ கூறியது மிகவும் நல்லது. நீ பணித்தபடியே செய்வேன்" என்றுகூறி விடைபெற்றுச்சென்று, இலங்கைமாநகரத்திலே, இயக்கர் சித்தர் வித்தியாதாராகிய சுற்றத்தார் சூழ வாழ்வானாகி, இராக்கதர் திருமாலுக்குத் தோற்றோடியொழிந்தநாள்முதலாக அழகிழந்து பாழாய்க்கிடந்த அந்த நகரத்தைப் புதுப்பித்து அலங்காரமுடையதாக்கி முடிசூடி அரசாளுவானானான்' என்று அகத்தியமுனி கூறக்கேட்ட இராமபிரான், 'இராவணாதி இராக்கதர் புலத்தியன் வழிவந்தவரென்று புகன்றாய். வேறுவழியாகத்தோன்றிய இராக்கதர் யாவர்? அந்த அரக்கர் வந்தவழியும் இலங்கையின் வரலாறும் அது இராக்கதருக்கு இருப்பிடமான விவரமும் அவர்கள் திருமாலுக்குத் தோற்றோடிய விருத்தாந்தமும் பிறவும் சொல்வாயாக' எனக் குறுமுனிவன் கூறுகின்றான்.

இரண்டாவது புலத்தியப்படலம் முற்றியது

[தொடரும்]

இனி நக்கீரர்பெயரால் வழங்கும் நூல்கள் முதலியவற்றை நோக்குவோம். அவை வருமாறு:

1 அகநானூறு: 17செய்யுட்கள் (36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389)

குறுந்தொகை: 8 செய்யுட்கள் (78, 105, 131, 143, 161, 266, 280, 368)

நற்றிணை: 7 செய்யுட்கள் (31, 86, 197, 258, 340, 358, 367)

புறநானூறு: 3 செய்யுட்கள் (56, 189, 395)

2 பத்துப்பாட்டு: நெடுநல்வாடை, திருமுருகாற்றுப்படை
3 கைலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி
4 திருவீங்கோய்மலை யெழுபது
5 திருவலஞ்சுழிமும்மணிக்கோவை
6 திருவெழுகூற்றிருக்கை
7 பெருந்தேவபாணி
8 கோபப்பிரசாதம்
9 காரெட்டு
10 போற்றித்திருக்கலிவெண்பா
11 கண்ணப்பதேவர் திருமறம்

11-ஆம் திருமுறை

12 களவியலுரை
13 அடிநூல்
14 நாலடிநானூறு

இந்நூல்களை நோக்கியவுடன் 11-ஆம் திருமுறையில் அடங்கிய நூல்களுள் திருமுருகாற்றுப்படையொழிய ஏனையவெல்லாம் சங்ககாலத்திற்குப் பிற்பட்டனவென்பது தெளிவாம். பிரபந்த வகையைநோக்கினும், யாப்புவகையைநோக்கினும், சொல்லின் உருவத்தைநோக்கினும், வடசொற்களின் அளவைநோக்கினும், கையாளப்பட்டுள்ள நடையைநோக்கினும் வரலாற்றுக் குறிப்பினைநோக்கினும் இவ்வுண்மை எளிதிற் புலப்படும்.

அந்தாதி, மும்மணிக்கோவை முதலியன மிகப் பிற்பட்ட பிரபந்த வகைகளாம். அந்தாதி முதலியவற்றைப் 'புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வ'தாகிய விருந்து என்பதன்பாற்படுப்பர் பேராசிரியர் (தொல். செய். 239. உரை). கலித்துறை என்னும் பாவினம் திருவலஞ்சுழி மும்மணிக்கோவையிற் பயின்றுவந்துள்ளது. இது மிகப் பிற்பட்டவழக்கென்பது செய்யுள்வரலாறு அறிந்தாரனைவர்க்கும் உடன்பாடாம். கைலை பாதி காளத்திபாதித் திருவந்தாதியைமட்டும் எடுத்துக்கொண்டால், அதில், நான் (96), நாங்கள் (44), உன் (14, 59), உனக்கு (77), இத்தனை (17), எத்தனையும் (86), ஆனாலும் (30, 55), காட்டுமின்கள், சூட்டுமின்கள் (36), கண்டிடுவான், உண்டிடுவான் (18), மன்னவனே (46), இருப்பன் (65) முதலிய பிற்கால உருவங்களும், அம்மான் (2), பேசு (27, 9, 79), அணுக்கர் (12), கிறி (12) முதலிய பிற்காலச்சொற்களும், சரணம் (4), தேவாதிதேவன் (5), ஈசன் (9, 38, 62), தீர்த்தன், பாசுபதம், பார்த்தன் (13), பாவித்தும் (14), தயா (14), நேசம் (17), பாதம் (18), சேமத்தால் (25), தீர்த்தம் (29), மூர்த்தி (29), கங்காளர் (30), பாலன் (33), நாதன் (34), நாமம் (38), பரமன் (49, 99), பசுபதி (50), காயம் (56), தியானிப்பார் (60), பத்தர் (71, 85, 86), ஆதரித்த (72), பாவம் (76), பாதாளம் (88), சங்கரன் (89), பாதாரவிந்தம் (99) முதலிய வடசொற்களும், விண்ணப்பம் (75, 77), நக்கன் (88) முதலிய பாகதச்சொற்களும் வந்துள்ளன. இவ்வந்தாதியினகத்தே கோச்செங்கட்சோழன் (32), மார்க்கண்டன் (33), உபமன்யு (81), சலந்தரன் (84) முதலியோர் வரலாறுகள் காணப்படுகின்றன. இவை யனைத்தும் சங்கநூல்களிற் காணப்படாதன; பிற்காலநூல்களிற் பெருவழக்கின. கோபப்பிரசாதத்தில் கண்ணப்பர், சண்டேசர், சாக்கியர், கோச்செங்கட்சோழர் வரலாறுகளும் கூறப்படுகின்றன. இவையும் சங்ககாலத்துநூல்களில் அறியப்படாத வரலாறுகள்.

அன்றியும் சிலசெய்யுட்கள் பழையகருத்துக்களைப் பொன்னே போற் போற்றுகின்றன. உதாரணமாக,

'சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா
நல்விடிஞ்சில் என்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று' (1)

என்பது,

'உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.

என்ற அப்பர்வாக்கை நினைப்பூட்டுகிறது.

'... ... ... நஞ்சு
உண்டமையால் உண்டிவ் வுலகு' (8)

என்பது,

'கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையா னுண்டிவ் வுலகு' (குறள்-571)

என்ற திருக்குறளை அடியொற்றிவந்துள்ளது.

'கூடியிருந்து பிறர்செய்யுங் குற்றங்கள்
நாடித்தங் குற்றங்கள் நாடாதே' (91)

என்பது,

'பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்' (குறள்-186)

'ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு' (குறள்-190)

என்பவற்றின் பொருளையுட்கொண்டு வந்துள்ளது.

'செய்ய சடைமுடியென் செல்வனையான் கண்டெனது
கையறவும் உள்மெலிவும் யான்காட்டப்—பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி யாள்வார்தம்
போரேறே இத்தெருவே போது' (78)

என்பது,

'போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
ஊரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேல்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ'

என்பது போன்ற முத்தொள்ளாயிரச் செய்யுட்களின் முறையைப் பின்பற்றி அமைந்தது.

செய்யுள்நடைநோக்கினும் இப்பிரபந்தங்களின் நடை பிற்பட்ட காலத்ததாகும்.

'கூறுய்நின் பொன்வாயாற் கோலச் சிறுகிளியே
வேருக வந்திருந்து மெல்லெனவே—நீல்தாவு
மஞ்சடையும் நீள்குடுமி வாளருவிக் காளத்திச்
செஞ்சடையெம் ஈசன் திறம்' (62)

என்ற செய்யுள் மிக அழகாயுள்ளது. இதன்கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லும் (காளத்தி, ஈசன் என்பன தவிர) சங்கச் செய்யுட்களிற் காணக்கூடியனவே. எனினும் இதன் நடை வேறு; சங்கச் செய்யுட்களின் நடை வேறு. தமிழ்நடையைக் கூர்ந்து ஆராய்வோர் இது பிற்பட்ட நடையென எளிதிற் கூறிவிடுவர். 'வேருகவந்திருந்து' என்பது நடையின் வேற்றுமையைத் தெற்றெனப் புலப்படுக்கின்றது.

மேற்காட்டிய காரணங்கள் அந்தாதி முதலிய 11-ம் திருமுறை நூல்கள் சங்ககாலத்திற்குப் பிற்பட்டனவென்பதையும், இவற்றை இயற்றிய நக்கீரதேவநாயனர் சங்கப்புலவராகிய நக்கீரர் அல்லரென்பதையும் தெளிவிக்கப் போதியவை. கற்றறிவாளர் எளிதில் ஒப்புக்கொள்ளும் இம்முடிபினைக் குறித்து இன்னும் பல கூறுதல் வேண்டற்பாலதன்று. இந் நக்கீரதேவநாயனர் இயற்றியருளிய திருவெழுகூற்றிருக்கை யாப்பருங்கலவிருத்தியில் எடுத்தாளப்படுதலின் இவரதுகாலம் 11-ம் நூற்றூண்டிற்கு முற்பட்டது. கண்ணப்பர்சரித்திரத்திற்குக் கொடுக்கும் தலைமையால், இவரை மாணிக்கவாசகசுவாமிகள்காலமாகிய 9-ம் நூற்றூண்டினராகக் கொள்ளுதல் பொருந்தலாம்.

இலக்கண ஆசிரியராகிய ஒரு நக்கீரரும் நமக்குப் புலப்படுகிறார். 'அடி-நூல்' என்ற செய்யுளிலக்கணமொன்று யாப்பருங்கல விருத்தியிற் காட்டப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் நக்கீரர் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இதினின்றும்,

ஐந்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
வெண்பா யாப்பிற் றரிய வல்ல (யாப். வி. பக். 348)

என்ற சூத்திரம் மட்டுமே இப்போது நமக்குக் கிடைப்பது. நூற்

பாவால் இஃது இயன்றதாதல்வேண்டும். இதனைப் பின்பற்றிக் கலிவிருத்தத்தால் இயன்ற பிறிதொருநூலும் முற்காலத்து வழங்கியதாதல்வேண்டும். யாப்பருங்கலவிருத்தியில் 414-ம் பக்கத்தில் வரும்.

சேரும் நேரடிப் பாவிலைந் சீரடி
யேரும் வெள்ளையல் லாவழி யென்பது
சோர்வி லாததோல் காப்பியத் துள்ளுநக்
கீர னாடி நூலுள்ளுங் கேட்பவே.

என்று வருஞ் செய்யுளால் இது தெரியவருகின்றது. இவ்விருத்தியுரையில் 'நாலடிநாற்பது'(பக். 32, 121) என வொருநூல் குறிக்கப்பட்டுள்ளது. யாப்பருங்கலக்காரிகையில் இந்நூல் அவிநயாது யாப்பதிகாரத்துக்கு அங்கமாக அமைந்தது எனக் கூறப்படுகிறது. இது வெண்பாவினால் இயன்றநூலென்பது விருத்தியுரைமேற்கோள்களால் விளங்கும். இதனை நக்கீரர் இயற்றியதாகக்கொண்டு நற்றிணைப்பதிப்பாசிரியர் அதன் முன்னுரையிற் குறித்தனர். டாக்டர் சாமிநாதையரவர்களும் தமது பத்துப்பாட்டுப்பதிப்பிற் பாடினோர்வரலாறு கூறுமிடத்தில் 'நக்கீரர் நாலடிநாற்பது' எனவே எழுதியுள்ளார்கள். இங்ஙனம் கூறுவதற்கு ஆதாரம் காணக்கூடவில்லை.

இறையனார்களவியலுக்கு உரைகண்டவரும் இவர்தாமோ என ஐயுறற் கிடமுண்டு. இவராகவேயிருப்பின், இவரதுகாலம் பாண்டிக்கோவையின் பாட்டுடைத்தலைவராகிய நெடுமாறர்காலமாகும். அஃதாவது 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். வேறொருவிஷயமும் இங்கே கூறுதற்குரியது. யாப்பருங்கல விருத்தியில் (பக். 217) 'நக்கீரர் நாலடிநானூற்றுவண்ணத்தால் வருவனவுமெல்லாம் தூங்கிசைச்செப்பலோசை.........முத்தொள்ளாயிரத்துவண்ணத்தால்வருவனவுமெல்லாம் ஒழுகிசைச்செப்பலோசை' என்று காணப்படுகிறது. இங்கே நாலடிநானூறு, முத்தொள்ளாயிரம் என்பன நூற்பெயர்களாம். 'நாலடியார்' என இக்காலத்து வழங்கும் கீழ்க்கணக்குநூலே நாலடிநானூறென்பது. மயிலைநாதர் 'அளவினாற் பெயர்பெற்றன பன்னிருபடலம், நாலடிநானூறு முதலாயின' என்பர் (சூ. 48, உரை). காரிகையுரைகாரர்

'திருவள்ளுவப்பயன், நாலடிநானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும்' என்பர் (40. உரை). 'நக்கீரர் நாலடிநானூறு' என்பது இறையனார்களவியல் என்பதுபோல நக்கீரர் இயற்றிய நாலடிநானூறு எனப் பொருள்படுதல்வேண்டும்.[1] இஃது உண்மையாயின் இந் நக்கீரர் பெருமுத்தரையர் காலத்தவராவர். ஏனெனின் பெருமுத்தரையரை இரண்டிடங்களில் (200, 296) நாலடி குறிப்பிடுகின்றது. இப்பெருமுத்தரையரது காலம் 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். இவர் செந்தலைச்சாசனத்தால் அறியப்படும் பெரும்பிடுகு முத்தரையராவர் (புதுக்கோட்டை மான்யுவல், வால்யூம் II, பகுதி I. பக்கம் 563-7). முற்குறித்த காலத்தோடு இதுவும் ஒத்துவருதலால், களவியலுரைகண்ட நக்கீரரே இந் நாலடிநானூற்றை இயற்றியவரென்பது அமைதியுறுகின்றது. நாலடி சமணநூலாதலின், இவர் சமணராதல்வேண்டும்.

முருகாற்றுப்படையியற்றிய நக்கீரர் மிக முற்பட்டவராக இருக்கவேண்டும் என்பது ஆற்றுப்படையின் நடையைநோக்கிய அளவிலே எளிதில் ஊகிக்கத்தகும். இதன் நடை சங்கச்செய்யுட்களின் நடையோடு ஒத்துள்ளது. எனினும் சில வழக்காறுகள் மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன.

'தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே' (89–90)

இங்கே முடிமார் என்பதனை ஆறனுருபுதொக்கபெயராகக்கொண்டு, 'முடிப்பவருடைய' என இங்கு வெளியிடப்பெறும் உரையின் ஆசிரியரும், நச்சினார்க்கினியரும் பொருளெழுதினர். இப்பிரயோகம் இலக்கணத்தொடு பொருந்துவதன்றென்பது,

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் கிளவியோடு முடியு மென்ப. (தொல்-வினை. 10)

என்ற தொல்காப்பியச்சூத்திரமும் அதன் உரைகளும் நோக்கியறியலாம். அன்றியும், இலக்கணத்திற்குப் பொருந்தாமையோடு,

---

[1] இதனை ஒப்புக்கொள்வதிற் பல தடைகள் உள்ளன. ஆனால் நக்கீரர் நாலடிநானூறு என்பதற்கு வேறுபொருள் கூறுதல் ஏலாது. யாப்பருங்கலவுரைக்குத் திருந்தியபதிப்பு வெளிவரின் இதனைத் தெள்ளிதின் அறியக்கூடும்.

சங்க இலக்கியவழக்கிற்கும்[1] முற்றும் மாறாகவுள்ளது. முருகாற்றுப் படையிலேயே ஓரிடத்து (வரி-173) 'பெறுமுறைகொண்மார்....... வந்துடன்காண்' என வழக்கொடுபொருந்திய பிரயோகமும் காணப்படுகின்றது.

பிறிதோரிடத்து (வரி-168) 'ஒன்பதிற்றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்' என வருகின்றது. இங்கே 'பெறீஇயர்' என்ற சொல் கவனித்தற்குரியது. இவ்வாய்பாட்டுச்சொற்கள் [2]எச்சமாகச் சில இடங்களிலும், [3]வியங்கோளாகப் பல இடங்களிலும் வருகின்றன. வேறு பொருள்களில் இவை வந்தனவாகத் தெரியவில்லை. இவ்வழக்கிற்கு மாறாகப் 'பெற்றவர்' என்னும் பொருளில் முருகாற்றுப்படையில் வந்துள்ளது.

இவ்வாறே மற்றோரிடத்துப் 'பெறலரும் பரிசில் நல்குமதி' (295) எனக் காணப்படுகின்றது. 'மதி' என்பது முன்னிலைக்குரிய அசைச்சொல்லாகும். இது,

மியாயிக மோமதி இகுஞ்சின் னென்னும்
ஆவயி னாறு முன்னிலை யசைச்சொல் (சொல். இடை. 26)

என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தால் நன்குணரப்படும். 'நீத்தலோம்புமதி' (நற்றிணை, 10) முதலிய வழக்குக்களையும் காண்க. தன்மை, படர்க்கைகளில் இகும், சின் என்ற இரண்டுசொற்களும் வருமேயன்றி 'மதி' வருதல் இல்லை. இது,

அவற்றுள்,
இகுமுஞ் சின்னும் ஏனை யிடத்தொடும்
தகுநிலை யுடைய என்மனார் புலவர். (இடை. 27)

---

[1] செப்பங்கொண்மார் (குறுந். 16), செய்வினைமுடிமார் (குறுந். 309), பேண்மார் (அகம். 35), கொண்மார் (அகம். 67), உய்ம்மார் (அகம். 207), சாஅய்மார்(கலி. 80), எள்ளுமார் (கலி. 81), கொண்மார் (புறம். 15), அறுமார் (புறம். 93), உண்மார் (புறம். 168), இறுமார் (புறம். 282), இடுமார் (புறம். 325) முதலிய பிரயோகங்கள் யான் கூறியதனைத் தெளிவிக்கும்.

[2] உணீஇயர் (அகம். 106); உடீஇயர் (அகம். 59)

[3] நிலீஇயரோ (புறம். 2); செலீஇயர், நிலைஇயர் (புறம். 24); பணியியர், செலியர்; இலியர் (புறம். 6); பெறீஇயர் (குறுந். 75); பெறீஇயரோ (குறுந். 83,277); இறீஇயர் (அகம்.49); படீஇயர் (அகம். 145) தவாஅலியரோ, அறுஅலியரோ (அகம். 338) பணீஇயர் (நற். 10)

என்னுஞ் சூத்திரத்தால் அறியலாகும். நச்சினார்க்கினியர் 'மதி' படர்க்கையிடத்தும்வரும்என்பதனைத் 'தகுநிலையுடைய(இடை.27) என்பதனானுதல், 'அவ்வச்சொல்லிற் கவையவை' (இடை.48)என்ற சூத்திரத்தானுதல் அமைத்துக்கொள்க என்று கூறினர். இது தம் கொள்கைக்குத் தாமேயாதாரம் ஆவதன்றிப் பிறிதில்லை. 'நல்கு' என்பதனை முற்றுக்கிநிறுத்து 'மதிபலவுடன்' என்றியைப்பது இலக்கண இலக்கிய வழக்குகளைப் புறக்கணித்தல்கூடாதென்னுங் கருத்தால் வலிந்து பொருள்கூறுதலேயாகும்; அது கொள்ளத் தக்கதன்று. ஆசிரியரது பெருந்தகுதியைநோக்கி இப்பிரயோகங் களை 'ஆர்ஷம்' எனக்கொள்ளுதலே தக்கதாகும்.

சங்கநூல்வழக்கோடு இங்ஙனம் மாறுபடுதலேயன்றி, நக்கீரர் இயற்றிய மற்றைச் சங்கச்செய்யுள்வழக்கொடும் மேற்காட்டிய பிரயோகங்கள் முரணுகின்றன.[1] இவற்றை நோக்கும்போது இவ் வாற்றுப்படையை இயற்றியவர் தொகைநூல்களிற் காணப்படுபவ வரும், நெடுநல்வாடையின் ஆசிரியருமாகிய நக்கீரரின் வேருவ ரெனத் தோன்றுகிறது.

இதற்கேற்ப இருவரது உலகமும் வெவ்வேருக உள்ளன. தொகைநூற்கவிஞருள் ஒருவராகிய நக்கீரர் சங்கப்புலவர்கள் பிறரோடொப்ப, அரசர்கள், குறுநிலமன்னர் முதலியோரது ஆதர வில் வாழ்ந்துவந்தவர். பாண்டியர்களுள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இவரது காலத்தரசன். இவன் ஆலங் கானத்துச்செருவில்,

---

[1] 'ஒழுகுமதி' எனப் புறத்திலும் (56), 'ஓம்புமதி' என நற்றிணையி லும் (358) வருகின்றன. 'நிலைஇயர்' எனப் புறத்திலும் (56), 'தேயர்' என நற்றிணையிலும் (197) காண்கின்றன. தருமார் (141),அயர்மார் (205), நிறுமார் (389) என அகத்திலும், 'அயர்மார்' என நற்றிணையிலும் (258), பெய்ம்மார் (54) புணர்மார் (67) என நெடுநல்வாடையிலு முள்ளன. ஈண் டெல்லாம் இச்சொற்கள் மேலை முருகாற்றுப்படைவழக்கொடு மாறுபடு கின்றன.

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ஐந்திணையைம்பது (உரையுடன்) | 0 | 4 | 0 |
| 2. | கனுநல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) | 0 | 3 | 0 |
| 3. | *வளையாபதிச்செய்யுட்கள் | | | |
| 4. | புலவராற்றுப்படை | 0 | 3 | 0 |
| 6. | *நேமிநாதம் (உரையுடன்) | | | |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | 0 | 2 | 0 |
| 11. | *விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம் | | | |
| 12. | *பன்னிருபாட்டியல் | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | 0 | 3 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 22. | *திருக்கலம்பகம் (ஷை) | | | |
| 23. | *விக்கிரமசோழனுலா | | | |
| 24. | குருமொழிவினாவிடை | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை | 0 | 8 | 0 |
| 28. | *சந்திராலோகம் | | | |
| 29. | *சோழவம்சசரித்திரச்சுருக்கம் | | | |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் | 0 | 4 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு | 0 | 8 | 0 |
| 34. | *அகப்பொருள்விளக்கம் | | | |
| 35. | *திருமந்திரநூறுபாட்டுக்குரை | | | |
| 36. | உவமானசங்கிரகம் | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | 0 | 2 | 0 |
| 39. | *பழமொழி மூலமும் பழையவுரையும் (முதல் 100 செய்) | | | |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு | 0 | 12 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | *கடைவள்ளலார்காலம் ... ... ... | | | |
| 50. | *தமிழரும் ஆந்திரரும் ... ... ... | | | |
| 51. | *மதங்கசூளாமணி ... ... ... | | | |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (தமிழ்) ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில்அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 66. | சந்திரகுப்தன் ... ... ... | 0 | 6 | 0 |
| 67. | அமிர்தாஞ்ஜலி ... ... ... | 0 | 2 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷச் சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச் சந்தா ரூ. 4—8—0. இதுவரை 38 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ. 4—12—0 வீதமும் விற்கப் பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

டாக்டர். உ. வே. சா
நூல் நிலையம்,
சென்னை - 600090.